# குழந்தைகளின் பிறப்புப் பத்திரங்கள் தேங்கிக் கிடக்கின்றன!

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★




ஈழநாடு
THE EELANADU
National Tamil Daily
தபால் பெட்டி எண் : 49
போன் : 389
மலர் 12
இதழ் 172
தேசிய தினசரி
யாழ்ப்பாணம் ஆடி 17 ஜமா. அவ் 28 ஞாயிற்றுக்கிழமை [2-8-70]




# ஆடி அமாவாசைத் தீர்த்தம் கீரிமலையில் சிறப்பாக நடந்தது!

## ஆயிரக்கணக்கானோர் விரதம் அனுஷ்டித்தனர்

மாவிட்டபுரம், ஞாயிறு

**ஆடி அமவாசைத் தீர்த்தம் கீரிமலையில் நேற்று சிறப்பாக நடைபெற்றது. ஆயிரக்கணக்கான மக்கள் தீர்த்தமாடி ஆடி அமாவாசைவிரதத்தை அனுஷ்டித்தனர்**

மாவைக் கந்தன் ஆலயத்திலிருந்து நேற்று அதிகாலை 3 மணிக்கு மூர்த்தி எழுந்தருளி கீரிமலையை அடைந்து கீரிமலை சிவன் ஆலய மூர்த்தி[illegible]டனும், மற்றும் கீரிமலையின் சுற்றுடலிலுள்ள மூர்த்திகளுடனும் இணைந்து கீரிமலையில் தீர்த்தமாடின. இதனைத் தொட[illegible]ர்ந்து அமைதியான முறையில் எவ்வித வேறுபாடுமின்றி[illegible] ஆயிரக்கணக்கான

**சிறிய பரபரப்பு**

நேற்று காலை மூர்த்தி மாவை ஆலயத்திலிருந்து மூர்த்தி எழுந்தருள ஆயத்தமான சமயம் ஆலய தெற்கு வாசலில் வெடி சத்தம் ஒன்று கேட்டது. இதையடுத்து அங்கு கூடி நின்ற பக்தர்களிடையே [illegible] பரபரப்பு ஏற்பட்ட[illegible]. அவ்வளவு நேரத்துக்கு நீடிக்கவில்லை.

[illegible]டார்.

மாவை ஆலயத்தைச் சுற்றிய பகுதியெங்கும் பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. பொலிஸார் மிகவும் எச்சரிக்கையோடு அசம்பாவிதங்கள் ஏற்படாதவாறு காவல் புரிந்து வருகின்றனர்.

**காவடி இரண்டு**

வழக்கமாக மாவை கந்தன் தேர்த்திருவிழாவுக்கு

## யாழ். கச்சேரி கடுகதி சேவையை ஆரம்பிக்கவும்

யாழ்ப்பாணம், ஞாயிறு

''யாழ்ப்பாணம் கச்சேரியிலிருந்து மாலை செல்லும் கடுகதி பஸ்சேவை கடந்த ஒருமாதகாலமாக விடப்படவில்லை இதன் காரணமாக பல அரசாங்கஊழியர்களும் பொதுமக்களும் மிகவும் கஷ்டப்படுகின்றார்கள் இச்சேவையை மீண்டும் உடனடியாக ஆரம்பிக்க வேண்டும்''.

காரைநகர்-யாழ்ப்பாணம் பிரயாணிகள் சங்கக்கமிட்டி கூட்டம் கரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்றபோது மேற்கண்டதீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

புதிய யாழ்-காரைநகர் பஸ் சேவைகால அட்டவணை தாயாரிக்கும் படியும் பல்வேறு பாதையிலும் ஓடும் பஸ்களை சீர் செய்யும் முகமாக வடபிராந்தியமுகாமையாளரை கேட்டுக் கொள்ளவும் தீர்மானிக்கப் தரமுயர்த்தி தராதரத்திற்கேற்ப அதிகாரிகளையும் பொறியியலாளர்களையும் நியமிக்கும் படி இ. போ. சபைதலைவரைக் கோருதல்; உப-டிப்போவில் தொழிலாளர் தங்குவதற்கு போதியளவு இடவசதியில்லைஆகவே வாடகைக்கு இடம் பெற்று விடுமாறுநிர்வாகத்தினரைக் கேட்பது; கிளிநொச்சித் தொகுதி இராமநாதபுரம் பஸ்சேவையை செல்லவிடும்படி கோருவது,

காரைநகர் கோவளம், மூளாய் ஊடாக சங்கானைக்கும் காரைநகரிலிருந்து அளவெட்டிக்கும் ஊடாக சுன்னாகத்திலிருந்து பஸ்சேவை ஆரம்பிக்கும்படியும் கோருதல்.

பின்வருவோர் புதுவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்:

தலைவர்: திரு. ஏ. எம். கந்தையா, உப தலைவர்: திரு மு. இரத்தினசிங்கம், செய

## பொது நிர்வாக சேவை பரீட்சை முடிவு

கொழும்பு, சனி

பொது திர்வாகசேவை5ம் தர முடிவுகள் வெளியாகியுள்ளன. இதில் 14 தமிழர் சித்தியடைந்துள்ளனர். விபரம் வருமாறு:-

எஸ். அரசரத்தினம், ஏ. அந்தோனிப்பிள்ளை, எஸ். எஸ். ஆனந்தன், பி நடராசா எம். சுப்பிரமணியம், ஜே. துரைராசா, எஸ். நடராசா எஸ். அருளானந்தம், எஸ். சிவசுப்பிரமணியம், சி. நடராசா, ஆர். செல்லப்பா ஏ. சி. சபாநாயகம், வி. பரமேஸ்வரன், கே. தர்மலிங்கம்.

**இன்று**

வண்ணை ஸ்ரீவைத்ஸ்வரன் ஆலயத்தில் 7ந் திருவிழாவான இன்று மாலை 6 மணி தொடக்கம் 7-30 மணி வரை ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் ''பாலாம்பிகை அருள்'' என்னும் பொருள் பற்றி [illegible]

## தவறு யாருடையது?

### ஒவ்வொருவரும் மாறி மாறி குற்றம் சுமத்துகிறார்கள்!

-எஸ் கே காசிலிங்கம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

**பல நூற்றுக்கணக்கான குழந்தைகளின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் யாழ்ப்பாணம் மேற்கு, கிழக்குப் பதிவுகாரர் கந்தோர்களில் தேங்கிக் கிடக்கின்றன இதனுல் புதிய கூப்பன்களைப் பெறுவதில் பெற்றுர் மிகுந்த சிரமந்துக்குள்ளாகியுள்ளனர்.**

குழந்தைகளின் பெற்றோரால் கொடுக்கப்பட்ட விலாசங்கள் தெளிவில்லாமல் இருப்பதால், பிறப்புப் பத்திரங்கள் விநியோகிக்கப்படாமல் தபால் இலாகாவினரால் திருப்பி தங்களுக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளதாக பதிவுகாரர்கள் தெரிவித்தனர். இதே வேளையில் சரியாகக் கொடுக்கப்பட்ட விலாசகாரரின் பத்திரங்களும் விநியோகிக்கப்படவில்லை என பல பெற்றோர் என்னிடம் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் பிறந்த குழந்தைகளின் நூற்றுக்கணக்கான பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் விலாசதாரரிடம் சமர்ப்பிக்கப்படாமல் திரும்பியுள்ளன. திரும்பியுள்ள பத்திரங்களில் 'இந்த விலாசத்தில் ஆட்கள் இல்லை, இந்த இலக்கத்தை உடைய வீடு இல்லை' என்று தபால் பகுதியினரால் எழுதப்பட்டுள்ளன.

பிரசவம் நடைபெற்ற ஆஸ்பத்திரிகளில் சரியாகக் கொடுக்கப்பட்ட விலாசங்கள் கூட பதிவுகாரரால் அனுப்பப்பட்ட பத்திரங்களில் மாறி எழுதப்பட்டுள்ளதாகவும், இது ஆஸ்பத்திரி ஊழியர்களின் கவலையீனமா? அல்லது பதிவுகாரரின் கவலையீனமா என்று தெரியாமல் பெற்றோர் திகைக்கின்றனர். 3 மாதத்தின் பின்னரும் பத்திரங்களை பெற்றுக்கொள்ளாத பலர் பதிவு காரரிடம் நேரில் சென்று எடுத்துச் செல்கின்றனர்.

89/1 என ஆஸ்பத்திரியில் கொடுக்கப்பட்ட வீட்டிலக்கம், பதிவுகாரரால் அனுப்பப்பட்ட பிறப்புப்பத்திரத்தில் 989/1 என்று பதியப்பட்டிருந்த காரணத்தினுல் அப்பத்திரம் திரும்பியிருந்ததைக் கண்டதாக பதிவுக்காரர் காரியாலயத்தில் நேரில் சென்று பத்திரத்தைப் பெற்றுக் கொண்ட ஒருவர் தெரிவித்தார்.

1967-ம் ஆண்டில் பிறந்த குழந்தைகளின் பத்திரங்கள் கூட பதிவுகாரர் கந்தோரில் கிடக்கின்றன. 3மாத காலத்துக்குள் பிறப்புப் பத்திரங்கள் அனுப்பி வைக்கப்படுவது வழமை.

புதிய கூப்பன் விநியோகிக்கும் வேளையில்தான் பல பெற்றோர் தங்களது குழந்தைகளின் பிறப்புப் பத்திரங்களைத்தேடி பதிவுகாரரிடம் வருகின்றனராம் பதிவுகாரரிடமிருந்து வரவேண்டியபத்திரம் உரியகாலத்தில் கிடைக்காததால் பலர் கச்சேரிக்கு விண்ணப்பஞ் செய்து எடுத்துள்ளதாகவும் தெரிகிறது.

பிரசவ இடங்களில் பெற்றோரின் விலாசங்களை தெளிவாகக் கொடுக்கும்படி பொதுமக்கள் கேட்கப்படுகின்றனர். ஆஸ்பத்திரிகளில் கடமையாற்றும் சம்பந்தப்பட்ட ஊழியர்களும் இதில் அதிக கவனம் செலுத்தி விலாசங்களைத் தெளிவாகப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் சுகாதார இலாகா அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## தீண்டாமை ஒழிப்புவெகுஜன இயக்கம் அறிவிப்பு

# "கடைசி மனிதன் உரிமை நிலைநாட்டப்படும் வரை போராடுவோம்!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஸ் சேவைகால அட்டவணை தயாரிக்கும் படியும் பல்வேறு பாதையிலும் ஓடும் பஸ்களை சீர் செய்யும் முகமாக வடபிராந்தியமுகாமையாளரை கேட்டுக்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது.

கீழ்க்காணும் தீர்மானங்கள் இக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

கரைநகர் உபடிப்போவை

தல்.

பின்வருவோர் புதுவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்:

தலைவர்: திரு. ஏ. எம். கந்தையா, உப தலைவர்: திரு மு. இரத்தினசிங்கம். செயலாளர்: திரு. ச. செல்லத்துரை, உதவிக் காரியதரிசி: திரு. ஆ. இராசநாயகம், பொருளாளர்: திரு. செ கனகசபை. (கு. வி. ம)

வான இன்று மாலை 6 மணி தொடக்கம் 7-30 மணி வரை ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் "பாலாம்பிகை அருள்" என்னும் பொருள் பற்றி கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார். சுவாமி நாகவாகனத்தில் வீதிவலம் வருதலும், திருமதி கமலாதேவி நடராசாவின் இன்னிசைக் கச்சேரியும் நிகழும்.

மூர்த்திகளுடனும் இணைந்து கீரிமலையில் தீர்த்தமாடினர். இதனைத் தொடர்ந்து அமைதியான முறையில் எவ்வித வேறுபாடுமின்றி ஆயிரக்கணக்கான மக்கள் கேணியிலும், கடலிலும் தீர்த்தமாடி தமது நேர்த்திக் கடன்களையும், விரதத்தையும் அனுஷ்டித்தனர். மாவை ஆலய நிர்வாகி திரு. ஸி. சுந்தரலிங்கமும் கீரிமலையில் காணப்பட்டார்.

கீரிமலையில் தற்காலிக பொலிஸ் நிலையம் ஒன்று அமைக்கப்பட்டு பொலிஸார் வீதி போக்குவரத்து ஒழுங்கு ஆகியவற்றைப் பாதுகாத்தனர். அமைதியான முறையில் தீர்த்தம் நடைபெறுவதற்கு உதவி அளித்தனர்.

நேற்று மாலை கீரிமலையிலிருந்து பூச்சப்பரத்தில், மூர்த்தி மாவை ஆலயத்துக்கு ஊர்வலமாக வந்த சமயம் பக்தர்கள் வழிநெடுகிலும் நிறைகுடம் வைத்து அர்ச்சனை செய்து முருகனை வழிபட்டனர்.

சத்தம் ஒன்று கேட்டது. இதையடுத்து அங்கு கூடிநின்ற பக்தர்களிடையே சிறிது பரபரப்பு ஏற்பட்ட போதும், அவ்வளவு நேரத்துக்கு நீடிக்கவில்லை.

**பதில்அரசாங்க அதிபர்**

சண்டேஸ்வரர், ஆறுமுகசாமி மாவை கந்தன் ஆலய தேர்களின் மேல் பகுதி தீக்கிரையான சம்பவம் குறித்து வடபகுதி பதில் அரசாங்க அதிபர் திரு. ஜே. எம். சபாரத்தினம் ஸ்தலத்துக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்து பார்வையிட்டார். ஆலயநிர்வாகிகளுடனும், பொலிஸாருடனும் உரையாடினார். தேரின் சேதங்களையும் கணக்கிட்

யோடு அசம்பாவிதங்கள் ஏற்படாதவாறு காவல் புரிந்து வருகின்றனர்.

**காவடி இரண்டு**

வழக்கமாக மாவை கந்தன் தேர்த்திருவிழாவுக்கு நூற்றுக்கணக்கானவர்கள் காவடி எடுப்பார்கள். இம்முறை நேற்று முன்தினம் இருவர் மட்டும் காவடி எடுத்ததைக் காணக் கூடியதாகவிருந்தது. 'ஆலயக் கதவுகள் திறந்தால் காவடி எடுப்பேன்' என்ற நேர்த்திக் கடனைப் பூர்த்தியாக்க சி. நவரத்தினம் என்ற பக்தர் காவடி எடுத்திருந்தார். மற்றவர் தமது வேறு நேர்த்திக்கடனைப் பூர்த்தியாக்க கரசக் காவடி எத்துதார்.

# கைத்தொழில் ஆசிரியர்களுக்கு குறுகிய காலப்பயிற்சி கிடைக்கும்

## ஆண்டு விழாவில் உதவி அமைச்சர்

கொழும்பு, ஞாயிறு

"தொழிலாளர்களும் விவசாயிகளும் ஆசிரியர்களும் தான் ஐக்கியமுன்னணி அரசாங்கத்தை அமைத்துள்ளார்கள். எமது நாட்டுமக்களுக்கு ஏற்ற முறையிலேயே அரசியலும் கல்விமுறையும் அமையும். நாட்டின் மூலப் பொருட்களுக்கு ஏற்றவகையில்தான் கல்வித்திட்டத்தை ஆக்கிக் கொள்ளவேண்டும்.

கனிஷ்ட பல்கலைக்கழகங்களில் கைத்தொழிற் பயிற்சியும் அளிக்க அரசாங்கம் எண்ணியுள்ளது. போதனாசிரியர்கள் யாவரும் பயிற்சி பெற்றிருக்கவேண்டிய அவசியம் ஏனவே கைத்தொழில் ஆசிரியர்களுக்குக் குறுகிய காலப்பயிற்சி அளிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது"

இவ்வாறு கல்வி உதவி அமைச்சர் திரு பி. வை. துடாவை தெரிவித்தார். கொழும்பு நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற அகில இலங்கை கல்விப்பகுதிகைத் தொழில் ஆசிரியர் சங்க வருடாந்தக்கூட்டததில் கலந்து கொண்டு பேசியபோதே உதவிஅமைச்சர்மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கைத்தொழில் ஆசிரியர்கள் சங்கம் அமைத்துள்ளது மகிழ்ச்சிக் குரியதென்றும், கடந்த ஐந்து ஆண்டுகளில் சங்கங்களின் கோரிக்கைகள் புறக்கணிக்கப் பட்டதாயும் கூறிய உதவிஅமைச்சர் அவற்றின் வேண்டுகோள்களை அலட்சியம் செய்யக்கூடாதென்றார். ஆங்கில ஆசிரியரென்றும் சிங்கள ஆசிரியரென்றும் ஆசிரியர்களை வேறுபடுத்தாதிருக்கவும் அரசாங்கம் எண்ணியுள்ளது என்றும் அவர் சொன்னார்.

சங்கத்தின் வடபகுதிக் கிளைச்சங்கச் செயலாளர் திரு. சே. சோமசுந்தரம்சிங்களத்தில் உரையாற்றியதை உதவி அமைச்சர் பாராட்டினார்

கைத்தொழில் ஆசிரியர் பயிற்சிக்கு ஆண், பெண் இருபாலாரும் தெரிவுசெய்யப்படவேண்டுமென்றும், பன்னவேலைஆசிரியர்களுக்கு உரியவேதனம் வழங்கப்படவேண்டுமென்றும், கைத்தொழில் ஆசிரியர்களுக்கு சம்பள விஷயமாக இழைக்கப்படும்அநீதிபற்றியும் வடபகுதிச் சங்கச் செயலாளர் பேசினார். திரு. சோமசுந்தரம் பேசியதாவது:-

'கலாசாலைகளில் விசேட பயிற்சி ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் நெசவு பாடத்திற்கு மாத்திரம் ஆண், பெண் என்ற பாகுபாட்டை அனுசரிப்பது நகைப்புக்கு இடமாக இருக்கிறது. நெசவைஒருபாடமாக கற்பிக்கும்ஆண் நெசவாசிரியர்களை விசேட பயிற்சிக்கு மாத்திரம் ஏன் புறக்கணிவேண்டும்? அப்படிப் புறக்கணிப்பதன் மூலம் அவர்களுக்கு ஏற்பட்ட நஷ்டத்திற்கு யார் பாத்திரவாளி என்பதை சிந்திக்கவேண்டும். இனிமேலாவது சேவையில் இருக்கும் ஆசிரியகளுக்கு ஒரு வருடமோ அல்லது ஆறுமாதமோ பயிற்சியளித்து அவர்களுக்கும் விசேட பயிற்சி ஆசிரியர்களின் சம்பளம் வழங்கப்படவேண்டும்.

கைப்பணி ஆசிரியைகளில் தராதரப்பத்திரம் இல்லாமல் அதிகமானபன்னவேலை ஆசிரியைகள் வடமாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் கடமையாற்றி வருகிறார்கள். இவர்களுக்கு இதுவரை சேவைத் தராதரப்பத்திரம் வழங்கப்படவில்லை. இது பற்றிப் பல தடவை கல்விப் பகுதிக்கு முறையிட்டு கவனிக்கப்படவில்லை. கைப்பணி ஆசிரியர்கள் கூடுதலாக் கீழ் வகுப்புகளுக்குக் கணிதம், எழுத்து, வாசிப்பு, தையல் முதலிய பாடங்களைத் திறம்படக் கற்பித்து வருகிறார்கள். ஆகவே இவர்களுக்குச் சேவைத் தராதரப்பத்திரம் வழங்கி அதற்குரிய வேதனம் வழங்கப்படவேண்டியது நியாயமானதாகும்.

சமவேலைக்குச் சம சம்பளம் வழங்கப்படவேண்டும். ஏனைய ஆசிரியர்களுக்கு இருக்கும் பதவி உயர்ச்சி கைத்தொழில் ஆசிரிய தராதரப் பத்திர ஆசிரியர்களுக்கு இல்லை. இவ்வாசிரியர்களின் சேவை மூப்பு அட்டவணையைக்கொண்டு கலை கைப்பணி ஆலோசகர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் முதலான உயர்ச்சிகளை இவ்வாசிரியர்களுக்கே கொடுக்கவேண்டும். எந்த வகைமான ஆசிரியர்களிலும் தராதரப்பத்திரமுடையோர்க்கும் பயிற்றப்பட்ட ஆசிரியர்க்கும் சம்பள விகிதத்தில் அதிக வித்தியாசம்இருக்கக்கூடாது

தலைமைச்சங்க உத்தியோகத்தர்தெரிவில் முன்பிருந் நிர்வாகிகளுடன் திரு. எஸ் துரையப்பா ஏகமனதாகத் திரும்பவும் தெரிவுசெய்யப்பட்டார். திருவாளர்கள் எம் கிருஷ்ணசிங்கம், எஸ். சோமசுந்தரம், திருமதி எஸ் தம்பிஐயா ஆகியோர் முறையே வடபகுதி கிளைத் தலைவர், செயலாளர், தனாதிகாரியாகப் பொதுச்சபையால் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

## சிறந்த அலுமினியப் பாத்திரங்களுக்கு




# பொலிஸ் தேடுகிறது

மாவிட்டபுரம், ஞாயிறு

நேற்று முன்தினம் மாவை கந்தன் இரு தேர்களின் மேற்பகுதி தீக்கிரையான சம்பவம் குறித்து சந்தேகத்தின் பேரில் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத் தலைவர் திரு. எஸ். ரி. என் நாகரத்தினத்தை பொலிஸார் தேடுகின்றனர்.

இந்த எரிப்புச் சம்பவம் சம்பந்தமாக எஸ். சண்முகவடிவேல், எஸ் பொன்னுச்சாமி ஐயர், செல்வி இந்துமதி உட்பட வேறுசிலரும் காங்கேசன்துறை பொலிஸாருக்கு வாக்குமூலமளித்தனர்.

# பொலிசார் எந்தவித உதவியும் வழங்கவில்லை

## —ஸி சுந்தரலிங்கம்

மாவிட்டபுரம் கந்தன் ஆலய நிர்வாகி திரு. ஸி, சுந்தரலிங்கம் எழுதுகிறார்.

1-8-70 ஈழநாடு முதற்பக்கச் செய்தியை முன்னிட்டு இவைகளை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்

O தேர்க்கிடுகு தீப்பற்றி எரியும்போது அதை அணைப்பதற்கு எந்த பொலிசாவது எவ்விதமான உதவியும் வழங்கவில்லை. தீயைப் பரவவிடாமல் தடுத்தது கோவிலுக்கு வந்த அடியார்களும் தொண்டர்களுமாவார்கள்,

O கொடியேற்றத் திருநாளன்று தான் பொலிசார் கோவிலுக்கு வந்ததாக செய்தி கூறுகிறது. இல்லை கொடியேற்றதிற்கு முதல் நாள ஆலயத்துள் அனுச்சாரமாக ஆக்கிரமித்தார்கள். இதனால் உற்சவங்கள் நிறுத்தப்பட்டன.

O ஹரிஜனர்கள் வாளியும் புதுக்கயிறும் கொண்டு வந்தார்கள்என்பதுபொய்-பாவனைக்குதவாதபழம் வாளியும் மாட்டுக்குக் கட்டிய பழங்கயிறுமே கொண்டுவந்தார்கள் எனக் கூறப்படுகிறது

O மாவிட்டபுரத்திலிருந்து கீரிமலைக்குச் சுவாமி தீர்த்தத்திற்கு போகும் போது தான் பொலிசார் வீதியருகே நற்கடமைபுரிந்தனர்.

O யானும் ஆதீனகர்த்தாவும் யாழ்மாவட்ட நீதிமன்றம் பிறப்பித்த இடைக்காலத் தடையுத்தரவைமீறிவிட்டதாக வடபகுதி பொலிஸ் அறிவித்திருப்பதாக இருக்கிறது.

எந்தவகையிலாவது எப்போதாவது யானோ அல்லது ஆதினகர்த்தாவோ அவ்வுத்தரவை மீறவில்லை என்பதை கோவிலுக்கு வந்த பல்லாயிரக்கனக்கான அடியார்கள் சாட்சியாக உலகிற்கு தெரியும் என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

## பிரயாணி கைது

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்தேவியில் நேற்று நண்பகல் யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில் வந்திறங்கிய பிரயாணி ஒருவர் அங்குள்ள கன்ரீனில் பணியாற்றுபவரையும், புகையிரத ஊழியர் ஒருவரையும் தாக்கியதாகப் பொலிசில் புகார் செய்யப்பட்டதைத் தொடர்ந்து பொலிசார் அவரைக் கைது செய்துள்ளனர்.

# நிலைநாட்டப்படும் வரை போராடுவோம்!"

யாழ்ப்பாணம், ஞாயிறு

31-7-70 அன்று மாவிட்டபுரத்திற்கு வழமை போல வழிபடச் சென்ற ஒடுக்கப்பட்ட மக்களின்மேல் தாக்குதல் தொடுக்கும் நோக்கத்தோடு சாதி வெறியர்கள் அசம்பாவிதங்களைத் தாங்களாகவேகட்டவிழ்த்து விட்டு கலவரங்களை உண்டு படுத்தினார்கள். வழிபாட்டிற்குச் சென்ற பெண்களின்மேலும் ஆயுத தாக்குதல்களை நடத்தினார்கள். 1968ம் ஆண்டு இதே இடத்தில் பொலிசார் எந்தப்பக்கமாநின்று நடவடிக்கைஎடுத்தார்களோ அதே போன்ற நடவடிக்கையைத் தான் இம்முறையும் எடுத்துள்ளனர். ஆனாலும் இம்முறை ஒடுக்கப்பட்ட மக்கள் மிகவும் கட்டுப்பாடாக தாக்குதல்களைச் சமாளித்து பாதுகாத்து முன்னேறிச் சென்றது. ஒடுக்கப்பட்ட மக்களின் ஐக்கியத்தையும் கட்டுப்பாட்டையும் மேலும் உறுதிப்படுத்துவதாக உள்ளது

தீண்டாமை வெகுஜன இயக்கம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அரசினர் சகல நடவடிக்கைகளிலும் சாதி வெறியர்களின் பக்கமாகவே நின்றுள்ளதென்பதும். உள்ளூரில் அரசாங்க ஆதரவாளர்களின் தலைவர்கள் சகலருமே இந்தநடவடிக்கைக்கு உதவி அளித்தார்கள் என்பதும் வெளிச்சமாகிவிட்டது. யார் எந்தப்பக்கத்துக்காக நின்றபோதிலும்ஒடுக்கப்பட்டமக்கள் தீண்டாமைஒழிப்புவெகுஜன இயக்கத்தின்தலைமையில் நம்பிக்கை கொண்டு கடைசி மனிதனின் மனித உரிமை நிலைநாட்டப்படும் வரை போராடியே வெற்றி காண்பார்கள் என்று வெகுஜன இயக்கம் பிரகடனப்படுத்துவதோடு, அநாகரிகமான சகல பிற்போக்காளர்களையும் அவர்களின் காவலர்களையும் பலமாகக் கண்டிக்கிறது.

# தோட்டத்தொழிலாளர் பற்றி ஆராயக்கமிட்டி நியமனம்

கொழும்பு, சனி

தோட்டத் தொழிலாளரின் சேமலாபநிதி கொடுப்பனவுகளை வழங்குவதற்கு உடனடி நசவடிக்கைஎடுப்பதால், தாயகம் செல்வோரின் தொகையை அதிகரிக்கச் செய்ய முடியும் என்று பிரதமமந்திரி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா கூறினார்.

பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் நிரந்தரக்காரியதரிசி, தொழில் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி மத்லியவங்கி கவனர். குடியேற்ற, குடிஅகல்வு அதிகாகள் கொண்ட மாநாடு ஒன்றைப் பிரதமர் ஸ்ரீமாவோ இன்று கூட்டினார். இதில இந்திய தொழிலாளரின் சேமலாபநிதி, சம்பளம் போன்ற கொடுப்பனவுகள் பற்றி தோட்டமுதலாளிமார்கையளித்த அறிக்கைகள் தகவல் பற்றி ஆராயப்பட்டன.

தோட்ட முதலாளிமார் கொடுத்த தகவல்களில் பிழையிருப்பதால் அதை உடனடியாக அமுல் நடத்த முடியாதிருப்பதாகவும், தகவல் சரியாக கொடுக்கப்பட்டால் காலதாமதமின்றி இந்திய வம்சாவழியினர் தாயகம் திரும்பும் தொகையை அதிகரிகச் செல்யலாம் என்றும் பிரதமர் கூறினார் இதுசம்பந்தமான அறிக்கைகளை ஆராயக் கமிட்டி ஒன்றுநியமிக்கப்பட்டது.

## பூனைகளுக்கு மயானம்

கெய்ரோ, ஆகஸ்ட். 1

எகிப்திய தொல்பொருளாராய்ச்சியாளர்கள் தங்கள் ஆராய்ச்சியின் போது பூனைகளுக்கான மயானம் ஒன்றைக் கண்டுபிடித்துள்ளார்கள்.

புராதன எகிப்தியர்கள் பூனைகளைத் தெய்வத்தன்மை வாய்ந்தவைகளாகவும் அவை பஸ்தாத் கடவுளின் மறு உரு எனவும் கொண்டாடப்பட்டன. இவ்வாறு தெய்வத்தன்மை வாய்ந்தனவாகப் பூசிக்கப்பட்ட பூனைகளை கி.மு.2000 ஆண்டுகளுக்கு முன்னர் மட்சாடிகளில் வைத்து குறிப்பிட்ட ஒரு இடத்தில் புதைத்தனர்.

இத்தகவலை அல் அஹ்ராம் பத்திரிகை வெளியிட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

கோழி:
40 நல்ல சாதிக் கோழிகள். முட்டையிடுவனவும் இறைச்சிக்கு உபயோகிக்கக்கூடியனவும் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு 383 A, நாவலர் வீதி, நல்லூர். 2175

### கல்வி

சாவகச்சேரியில் தமிழ், ஆங்கில தட்டெழுத்து (Type-writting) பயிலவிரும்பும் ஆண் பெண் இருபாலாரும் தொடர்புகொள்ளவும். சபா. நாகராஜன், இல. 70, கோர்ட்வியூ சாவகச்சேரி. எம்மிடம் சகலவிதமான விண்ணப்பப்படிவங்களும் பெற்றுக்கொள்ளலாம். 3027

### விற்பனைக்கு

வீடு:
உரும்பராய் கிழக்கில் ப. நாகலிங்கம் அவர்களுக்குச் சொந்தமான 8 பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்குண்டு விபரங்களுக்கு: அ. சுப்பிரமணியம் புரக்டர், உரும்பிராய். 2176


## ல.ச.ச.க. கிளை

யாழ்ப்பாணம், ஞாயிறு
புளியங்கூடல் லங்கா சம சமாஜ வாலிபமுன்னணி நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: க-சபாரத்தினம் உபதலைவர்கள்: ஆ- விஸ்வலிங்கம், அ. தியாகராசா' இணைச்செயலாளர்கள்: ந- முத்துக்கிருஷ்ணன், கா-பாலகிருஷ்ணன் தனாதிகாரி: கு. பாலசுப்பிரமணியம் உறுப்பினர்: ப- பாலசுப்பிரமணியம், மு. விஜயரத்தினம்:


ராணி (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
ஜெமினி — சௌகார்ஜானகி — நாகேஷ் — ஜெயந்தி நடித்த
இரு கோடுகள்

வெஸ்லி சினிமா மானிப்பாய்
தினசரி 3 காட்சிகள் 2-30, 6-30, 10-00 மணி
சத்தியன், ஷீலா, மது நடித்த
செம்மீன்
(ஈஸ்ட்மன் கலர் - மலையாளம்)

ராஜா (யாழ்ப்பாணம்) 10-30, 2-30, 6-30 10 00மணி
சரஸ்வதி (திருமலை) 6-15, 9-30 மணி
என்.எஸ் கிருஷ்ணன், ரி.ஏ.மதுரம் ஜெமினி கணேசன், டெய்ஷி ராணி மற்றும் பலர் நடித்த
67-ல்
என்.எஸ். கிருஷ்ணன்
(எஸ். ரி. ஆர். பிலிம்ஸ்)
பிலிம் (f) பெயர் பத்திரிகை டெல்லியில் நடாத்திய நட்சத்திரக் கலைவிழாவும் கலரில் காண்பிக்கப்படும்

வின்ஸர் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
★ குமாரி ராஜம் புவனேந்திரம்
★ லடீஸ் வீரமணி


# கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலை முதலிடம்

யாழ்ப்பாணம், சனி
கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலைக்கும், நல்லூர் ஆசிரிய கலாசாலைக்குமிடையே கடந்த 30ந் திகதி நடைபெற்ற மெய்வல்லுநர் போட்டியில் கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலை நூற்றி ஐந்தரைப் புள்ளிகள் பெற்று 79 அதிகப்படியான புள்ளிகளால் வெற்றியீட்டியது. போட்டியில் பிரதம அதிதியாக வடமாநில கல்வியதிபதி திரு. வி. சங்கரலிங்கம் கலந்துகொண்டார்.

சிறந்த வெற்றி வீரனாக திரு.ச. அன்ரனி மிராண்டாவும் (கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலை), சிறந்த சாதனை வீரனாக கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலையைச் சேர்ந்த திரு ந நடனசண்முகதாசனும் தெரிவு செய்யப்பட்டனர். சிறந்த அஞ்சலோட்ட வீரருக்குரிய வெற்றிக் கிண்ணத்தைக் கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலை பெற்றுக்கொண்டது.

100மீட்டர்: ச அமிராண்டா (கொ) கு மகாலிங்கம் (ந) ச மரியதாசன் (கொ)

800மீட்டர்: ஆ பங்கிராஸ் சொய்சா (கொ) ம இரத்தினசிகாமணி (ந) க சிவபாதம் (ந).

நீளம் பாய்தல்: நா நடனசண்முகதாசன் (கொ) ச அமிராண்டா (கொ) நா கணபதிப்பிள்ளை (ந).

தத்தி மிதித்துப் பாய்தல்; நா நடனசண்முகதாசன் (கொ) வை சின்னத்தம்பி (கொ) சூ மரியாம்பிள்ளை (கொ) க சிவபாதம் (ந).

400 மீட்டர்: ஆ. பங்கிராஸ் சொய்சா (கொ) கு யோ ோ பெர்னாண்டோ (கொ) சி பாலசுப்பிரமணியம் (ந).

தட்டெறிதல்: அ இ இராஜசிங்கம் (கொ) ச கனகலிங்கம் கொ) ம இரத்தினசிகாமணி (ந).

200மீட்டர்: ச அமிராண்டா (கொ) கு மகாலிங்கம் (ந) ச தர்மராசன் (கொ).

குண்டெறிதல்: ச கனகலிங்கம் (கொ) ஆ ப பிகுரூடோ (கொ) அ இ இராஜசிங்கம் (கொ).

500 மீட்டர்: வ கயிலேஸ்வரன் (கொ) தி தம்பிராஜா (கொ) ஆ பங்கிராஸ் சொய்சா (கொ)

உயரம் பாய்தல்: ஆ பிகுரூடோ (கொ) வை சின்னத்தம்பி (கொ) செ சுந்தரமூர்த்தி (கொ).

## இலங்கை ஒலிபரப்புக்

## தீவுப்பகுதி மெய்வல்லுநர் போட்டி

வேலணை, சனி
தீவுப்பகுதிக் காரியாதிகாரி பிரிவு விளையாட்டுச் சங்கம் நடத்தும் 1970ம் ஆண்டுக்கான மெய்வல்லுனர் போட்டி இம்மாதம் நடைபெறவுள்ளது. வேலணை மத்திய மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் இரு தினங்கள் நடைபெறும் விளையாட்டுப் போட்டிக்கான விண்ணப்பங்கள் தீவுப்பகுதி சனசமூக நிலையம், விளையாட்டுக் கழகம் ஆகியவற்றிடமிருந்து கோரப்பட்டுள்ளன

## கைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

பச்சிலைப்பள்ளி, சனி
பச்சிலைப்பள்ளிக் காரியாதிகாரிக்குட்பட்ட விளையாட்டுச் சங்கங்களுக்கிடையிலான கைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி வெகுவிரைவில் நடைபெறவிருக்கிறது இதற்கான விண்ணப்பங்களை உடன் அனுப்பிவைக்குமாறு பச்சிலைப்பள்ளி காரியாதிகாரி ஒவ்வொரு விளையாட்டுச் சங்கங்களுக்கும் கடிதமூலம் அறிவித்துள்ளார். கைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டிக்கான ஏற்பாடுகளை பச்சிலைப்பள்ளிப்பகுதி விளையாட்டு அதிகாரி திரு தொ. சவரிமுத்து செய்து வருகின்றார்.

... ...


## இணுவில் மாணவர் மன்றம்

இணுவில், சனி
இணுவில் மாணவர் மன்றத்தின் புதிய உத்தியோகத்தராகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர் திரு. க. கதிரவேல், தலைவர்: செல்வன் பொ அருட்பிரகாசம், உபதலைவர்: செல்வன் க. முருகேசபிள்ளை, காரியதரிசி: செல்வன்: ந.சண்முகப்பிரபு உபகாரியதரிசி: செல்வன் க. இளமுருகன், தனாதிகாரி செல்வன் சி. பஞ்சாட்சரம்:

பதினொருபேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

## "கயரோகம் பரம்பரை வியாதியல்ல"



சினிமா விமர்சனம்

# 67-ல் என். எஸ். கே.

67-ல் என். எஸ். கிருஷ்ணனா? அவர் இவ்வுலகை விட்டுப் பிரிந்து ரொம்ப நாளாச்சு! இப்படி யாரும் கேட்க மாட்டார்களென்றே நினைக்கிறேன்! பெரியவர்கள் அதாவது மகான்கள், மேதைகள் இறப்பதில்லை.

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் ஒரு மேதை. அவர் 67-ல் மட்டுமல்ல 76லும் வாழ்ந்து கொண்டேயிருப்பார்.

கலைவாணர் மட்டுமா? அவருடைய ஜோடி டி. ஏ. மதுரத்தையும் அவர் வளர்த்துவிட்ட கே. ஏ. தங்கவேலு, காக்கா ராதாகிருஷ்ணன், சி.எஸ். பாண்டியன், புளிமூட்டை ராமசாமிஐயர் போன்ற நகைச்சுவை நடிகர்களையும் பல வருடங்களுக்குப் பின் சென்று பார்த்து மகிழலாம்.

சிரிப்பதல்ல சிந்திக்கவும் வைக்க வேண்டும். அது தான் நகைச்சுவை நடிப்பு. அதற்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர் கலைவாணர்

தீண்டாமை ஒழிப்புபற்றி இப்போதுகூட சர்ச்சையுண்டு. தீண்டாமை ஒழிப்புக்கு பல வருடங்களுக்கு முன்னரே தமது நடிப்பினாலும் கருத்துள்ள நகைச்சுவை வசனத்தினாலும் துணிந்து வழிகாட்டியவர் கலைவாணர். கிந்தனார் காலட்சேபம், ஆற்றங்கரையில் பாசுரம் பாடிக்கொண்டிருந்த ஐயங்கார் 'புலைச்சி' மீது மையல் கொள்ளும் காட்சி இவற்றுக்குச்சான்று.

மதுஒழிப்புக்கு 'நாட்டுக்குச் சேவை செய்ய நாகரிகக் கோமாளி' 'தமிழ் நாடு' என்று அன்றே பெயர் சூட்டி திரைப்படத்தின் மூலம் தமிழ்கூறும் நல்லுலகுக்கு அறிவித்தவரும் அவரே.

இத்தனையையும் மக்கள் மறந்துவிட்டாலும் மீண்டும் நினைவுபடுத்துவதற்கு '67-ல் என். எஸ். கே.' படத்தைத் தொகுத்துத் தந்தவர்களையும் அந்தப் படத்தொகுப்பை இலங்கை மக்களும் பார்த்து ரசிக்க, சிந்திக்க, கலைவாணரை நினைவுகூர சந்தர்ப்பம் அளித்திருக்கும் எஸ். ரி. ஆர். பிலிம்சாரையும் பாராட்ட வேண்டும்.

கலைவாணரையும் மதுரத்தையும் அவர்கள் உருவாக்கிய நகைச்சுவைக் கலைஞர்களையும் மட்டுமல்ல அமரர் அறிஞர் அண்ணா, தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி, கல்விஅமைச்சர் இரா. நெடுஞ்செழியன், திருமுருக கிருபானந்தவாரியார், நடிகை பத்மினி ஆகியோர் கலைவாணரைப் பாராட்டி அவரது நினைவுவிழாவில் பேசுவதையும் பார்க்கவும் கேட்கவும் '67-ல் என்.எஸ் கே.' படம் வாய்ப்பளிக்கிறது.

கலைவாணரின் நகைச்சுவையை முன்பு ரசித்து மகிழ்ந்தவர்கள் மீண்டும் ரசிக்கவும் கலைவாணரைப் பற்றிக்கேள்விப்பட்டதுடன் பார்க்கும் வாய்ப்பில்லாதிருந்த இளைஞர்கள் கலைவாணரின் சிறப்பையும் சிந்தனையையும் பார்க்கவும் அருமையான சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. தவறவிடாமல் 'ராஜா'வில் பாருங்கள்.

— 'திரைவண்டு'

## உடற்பயிற்சி ஆ. சங்கம் தீர்மானம்

பருத்தித்துறை, சனி
மாவட்ட உடற்பயிற்சிப் பரிசோதகராகக் கடமையாற்றி கல்வி ஆலோசகராகப் பதவி உயர்வு பெற்ற திரு ஆர். எஸ். சீவரத்தினத்திற்கு வடமாகாண உடற்பயிற்சி ஆசிரியர் சங்கம்ஒரு பாராட்டுவிழாவும் விருந்துபசாரமும் நடாத்தத் தீர்மானித்துள்ளது.

வடமாகாண உடற்பயிற்சி ஆசிரியருக்கான திறமைகாண் பரீட்சைக்கான வகுப்புகளை திரு சீவரத்தினம் இம்மாதம் நடுப்பகுதியிலிருந்து யாழ்ப்பாணத்தில் நடாத்துவதற்கான ஒழுங்குகளை வடமாகாண உடற்பயிற்சி ஆசிரியர் சங்கம் மேற்கொண்டுள்ளது.

## இரு வடபிராந்திய பரிசில்கள்

யாழ்ப்பாணம், ஞாயிறு
சென்ற மாதம்10ம் 12ம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற வடபிராந்தியத் தமிழ்மொழித்திறன் போட்டியில் மேற்படி வித்தியாலயம் இரு பரிசில்களைப் பெற்றது.

மேற்பிரிவுக்கான சொற்பொழிவுப் போட்டியில் செல்வன் அ. சண்முகதாசன் இரண்டாமிடத்தையும் கீழ்ப்பிரிவுக்கான பாஒதல் போட்டியில் செல்வன் வீ.மகாலிங்கம் இரண்டாமிடத்தையும் பெற்றனர்.

## புதிய வீதிகள்

அம்பன், சனி
அரசாங்க பகிரங்கவேலைப் பகுதியினரால் பல ஆயிரக் கணக்கான ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் குடத்தனை-வரணிவீதி வேலைகள் பூர்த்தியாகும்தறுவாயில் இருக்கின்றன மேற்படி வீதி திறக்கப்பட்டால் 15மைல் தூரம் சுற்றி வந்தடையும் வரணியை 3 மைல் தூரத்தில் சென்றடையலாமென்பது குறிப்பிடத்தக்கது. இவ்வீதியால் புதிய பஸ்சேவை ஆரம்பிக்ககூடிய சாத்தியக்கூறுகளும் இருக்கின்றன.

இதேபோன்று எழுதுமட்டுவான் கிராமசபையினரும் குடத்தனை கிராமசபையினரும் முயற்சிஎடுத்துவரும் நாகர்கோவில் - எழுதுமட்டுவான் வீதி வேலைகள் பூர்த்தியடைந்தால் 30 மைல்தூரம் சுற்றி வந்தடையவேண்டிய எழுதுமட்டுவாளை 3 மைல் தூரத்துடன் சென்றடையக்கூடியதாக இருக்கும் அண்மையில் மேற்படி வீதி வேலைக்கு குடத்தனைக்கிராமசபை நிதிஒதுக்கியுள்ளது


வியாபாரம்பெருக விளம்பரம் செய்க

போர்ஹான்ஸ்
புன்னகைப் புதிர்
போட்டி.
ரூபா 17,650-00
பரிசு பெற சந்தர்ப்பம் அளிக்கின்றது.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தினசரி 4 காட்சிகள்

★ குமாரி ராஜம் புவனேந்திரம்
★ லடீஸ் வீரமணி
★ அடங்காபிடாரி புகழ் நடராசா

நடித்த

இலங்கையின் இயற்கைக் காட்சிகளைக்கொண்டு
உருவாக்கப்பட்ட சித்திரம்.

மீனு மூவிஸ்

# வெண்சங்கு

தயாரிப்பு: டைரக்ஷன்: W. M. S. தம்பு



இப்பொழுது திரையிடப்படுகிறது!

இங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)

வெலிங்டன் யாழ்ப்பாணம்

திரைகளில்

தினசரி பி.ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
(போயா, பிரிப்போயா) காலை 10-30)



★ ஏ.வி.எம்.ராஜன்
★ சௌகார்ஜானகி
★ நாகேஷ் ★ குமாரிசச்சு
சாண்டோ எம். எம். ஏ. சின்னப்பதேவர்
★ கே. பி. சுந்தராம்பாள்
★ திருமுருக கிருபானந்தவாரியார்

மற்றும்பலர் நடித்த

'தெளிவில்லா இதயங்களைத் தெளியவைக்கும்
தெய்வத் தமிழ்க் காவியம்'

# துணைவன்

கதை வசனம் பாலமுருகன்
சங்கீதம் K.V. மகாதேவன்
தயாரிப்பு: சாண்டோ M. M. A. சின்னப்பதேவர்


ரூபேடா (கொ) வை சின்னத்தம்பி (கொ) செ சுந்தரமூர்த்தி (கொ).

— —

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### ஞாயிறு 2—8—70

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-15, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 கிறிஸ்தவ நற்சிந்தனை, 6-35 மெல்லிசை, 7-30 திரைகானம், 7-45 நினைவுக்குறிப்பு, 8-00 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமிய கீதங்கள், 8-30 பாட்டு.

344 மீ. அன்ட் 49 மீ.

9-30 பக்திப்பாடல்கள், 10-00 பட அம்சம் — தில்லானா மோகனாம்பாள், 10-45 லயவின்யாசம், 11-00 எங்கள் விருந்தாளி, 11-45 வாத்தியஇசை.

பகல் 12-00 தொழிலாளர்கேட்டவை, 1-00 கதம்ப இசை.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள். 5-30 வளரும்பயிர்.

இரவு 6-00 இசைப்பயிற்சி, 6-30 மகளிர் அரங்கம், 7-00 வாத்தியஇசை, 7-15 பாட்டு, 7-45 செய்திச் சுருள், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 உரை, 9-40 நாதஸ்வரம், 10-30 செய்தித் தொகுப்பு.


ஸ்ரீகாலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 9-30 மணி, போயா, பிரிபோயா 2-30
ஜெய்சங்கர்- விஜயநிர்மலா
நடித்த
சிரித்த முகம்



REGAL JAFFNA
Daily 4-45, 7& 945-P.M.
Poya, Pre-poya 4 Shows
Rod Taylor, Claudia Cardinale
in
THE HELL WITH HEROES
(Adults only)



MANOHARA JAFFNA
Daily 4-45, 7-00&9-45p.m.
Poya-Prepoya 10-30 a.m.
Graig Stevens
in
GUNN... Number One
(Strictly for adults)


...சய்யப்பட்டது.

— —

## "கயரோகம் பரம்பரை வியாதியல்ல"

மட்டுவில், சனி

கயரோகம் என்பது ஒரு பரம்பரை வியாதி என்ற தப்பபிப்பிராயம் இருந்த காலமும் ஒன்று இருந்தது. ஆனால் அறிவியல் விஞ்ஞானம் முதிர்ச்சியடைந்துள்ள இன்றைய நிலையிலே அதைப்பற்றிய கவலை மக்கள் மத்தியில் அறவே கிடையாது. எனவே இதை அழிப்பதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பே அவசியமானது, என்று இலங்கை தேசிய கயரோக நிவாரண சங்கத்தின் தென்மராட்சிக் கிளைத் தலைவர் வழக்கறிஞர் பாலகிருஷ்ணன் இங்கு நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் கூறினார்.

சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் திரு. எஸ். கே. மயில்வாகனமும் பேசினார்.

வழக்கறிஞர் திரு. எஸ். கே திரவியநாயகம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பின்வருவோர் புதிய உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் வழக்கறிஞர் திரு. வி. பாலகிருஷ்ணன் உபதலைவர்கள் திருவாளர்கள் என். அருணசலம் வழக்கறிஞர் எஸ். கே. மயில்வாகனம் செயலாளர் திரு எஸ். நடராஜா பொருளாளர் திரு. எஸ். நல்லையா போஷகர்கள் திரு. வி. என். நவரத்தினம் எம். பி., திரு. கே. விக்னராஜா மாஜிஸ்திரேட்

— —

## அமைச்சரைச் சந்திப்பர்

பருத்தித்துறை, சனி


உடற்பயிற்சி போதனாசிரியர் குழு ஒன்று திரு. ஏ. வைத்திலிங்கம் தலைமையில் கல்வி அமைச்சரைச் சந்தித்துத் தமது குறைகளை எடுத்துச் செல்லவிருப்பதாக உடற்பயிற்சிப் போதனாசிரியர் ஒருவர் தெரிவித்தார்.

உடற்பயிற்சிப் போதனாசிரியருக்குத் திறமை காண் பரீட்சை விதிக்கப்பட்டிருப்பதாயும், அப்பரீட்சையிற் சித்தியெய்தினால் மட்டுமே சம்பள உயர்வு கிடைக்குமென்றும், ஆசிரியர்களுள் ஒரு சாராரான உடற்பயிற்சிப் போதனாசிரியர்களுக்கு மட்டும் இவ்வித விதியிருப்பது நியாயமற்றதென்றும் இக்குழு அமைச்சருக்கு எடுத்துக் கூறுமென அவர் தெரிவித்தார்.


# போட்டி.

## ரூபா 17,650-00

பரிசு பெற சந்தர்ப்பம் அளிக்கின்றது.
ரொக்கமாக 50 ஆறுதல் பரிசுகள்



முதலாவது பரிசு ரூபா 5000-00
இரண்டாவது பரிசு ரூபா 3000-00
மூன்றுவது பரிசு ரூபா 2000-00

ரூபா 100/- விகிதம் 50 ஆறுதல் பரிசுகள் — ரூபா 5000-00
ரூபா 50/- விகிதம் 53 வியாபாரிகளுக்கான பரிசுகள் — ரூபா 2650-00

மேலே 4 அழகிய போர்ஹான்ஸ் பாவனையாளர்கள் அங்குமிங்குமாக காணப்படுகிறார்கள். நீங்கள் செய்யவேண்டியது இதுதான். கீழேயுள்ள போர்ஹான்ஸ் பாவனையாளர்களின் அழகிய புன்னகையை வெட்டி எடுத்து சரியான முகத்துடன் சேர்த்து முழுப் படமாக்குங்கள்.

முழுமையாக்கப்பட்ட படங்களை ஒரு மொத்தமான கடுதாசியிலோ அல்லது மட்டையிலோ ஒட்டி உங்கள் பெயர் விலாசம் ஆகியவற்றை பிரவேசப் பத்திரத்தில் தெளிவாக எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள்: உங்கள் வாடிக்கைக் கடைக்காரரின் பெயரையும் விலாசத்தையும் குறிப்பிடத் தவருதீர்கள். ஏனெனில் உங்கள் வியாபாரிக்கும் 50/- பரிசு உண்டு. நீங்கள் அனுப்பும் ஒவ்வொரு பிரவேசப் பத்திரத்துடனும் ஒரு பெரிய அல்லது மத்திம சைஸ் போர்ஹான்ஸ் பற்பசை வெத்துப் பெட்டி அல்லது இரண்டு சிறிய சைஸ் வெத்துப் பெட்டிகள் சேர்த்து அனுப்பப்படல் வேண்டும்.

நீங்கள் எத்தனை பிரவேசப் பத்திரங்களையும் அனுப்பலாம். ஆனால் ஒவ்வொரு பிரவேசப் பத்திரத்துடனும் ஒரு பெரிய அல்லது மத்திம சைஸ் போர்ஹான்ஸ் பற்பசை வெத்துப்பெட்டி அல்லது இரண்டு சிறிய சைஸ் வெத்துப் பெட்டிகளை சேர்த்து அனுப்புதல் வேண்டும்.

வெத்துப் பெட்டியுடன் கூடிய பிரவேசப்பத்திரங்களை "போர்ஹான்ஸ் புன்னகைப் புதிர் போட்டி, மே/பா. மஹாராஜா ஆர்கனைசேஷன் லிமிட்டெட், த. பெ. இல. 319, கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்பிவையுங்கள்.

இப்போட்டியில் மஹாராஜா ஆர்கனைசேஷன் லிமிட்டெட், ஷெனித் அட்வெடைசிங் ஆகிய ஸ்தாபனங்களின் ஊழியர்களைத்தவிர, இலங்கையில் வசிக்கும் எவரும் கலந்து கொள்ளலாம்.

மத்தியஸ்தர்களின் தீர்ப்பே முடிவானது. இதையிட்டு எவ்வித கடிதப் போக்குவரத்தும் வைத்துக் கொள்ளப்படமாட்டாது.

இப்போட்டி 1970-ம் ஆண்டு செப்டம்பர் 30-ம் திகதி முடிவடையும்.

பிரவேசப் பத்திரம்

பெயர்: ....................

விலாசம்: ....................

வியாபாரியின்
பெயர்: ....................
விலாசம்: ....................




ZENITH


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க யோசனை: இஸ்ரேலும் ஏற்றது

## அதிபர் நிக்ஸன் வரவேற்பு

## அமைதி முயற்சியில் மீண்டும் டாக்டர் ஜாரிங் ஈடுபடுவார்

நெல்அவிவ், ஆகஸ்ட், 1

மேற்காஸிய அமைதிக்கு அமெரிக்கா தெரிவித்திருக்கும் யோசனையை இஸ்ரேல் அரசாங்கமும் ஏற்றுக்கொள்ள முடிவு செய்துவிட்டது. இஸ்ரேலின் இந்த முடிவை அமெரிக்க அதிபர் பாராட்டிவரவேற்றிருக்கிறார்.

ஒரு வாரகாலம் அமெரிக்க யோசனை பற்றி ஆலோசனைகள் நடத்திவந்த இஸ்ரேலிய மந்திரிசபை அதனை ஏற்றுக்கொள்வதென்று ஒருமனதாக முடிவுசெய்தது ஆனால் முன்நிபந்தனையெதுவுமின்றி ஜாரிங் கமிஷனை ஏற்றுக்கொள்ளமுடியாதெனக்கூறி அமைச்சரவையைச் சேர்ந்த வலதுசாரி அமைச்சர்கள் அறுவர் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை.

### நிக்ஸன் வரவேற்பு

இஸ்ரேல்மந்திரிசபைஎடுத்துள்ள முடிவு குறித்து அமெரிக்க அதிபர் நிக்ஸன் வரவேற்பு தெரிவித்திருக்கின்றார். அமைதி ஏற்படவேண்டுமானால் இருதரப்பினருமே விட்டுக்கொடுக்க முன்வரவேண்டும். தாங்கள் கோரும் விஷயங்களில் சிறிதளவேனும் இருதரப்பினரும் விட்டுக்கொடுக்கத்தயாராய் இருந்தால்தான் அமைதிக்கு வழிபிறக்குமென்று அதிபர் நிக்ஸன் தெரிவித்திருக்கிறார்.

### டாக்டர் ஜாரிங் திரும்புகிறார்

மேற்காஸியாவில் அமைதிமுயற்சிகளில் ஈடுபடுவதற்காக ஐ. நா. பொதுச்செயலாளர் நியமித்த டாக்டர் ஜாரிங் மாஸ்கோவிலிருந்து இப்பொழுது நியூயோர்க் திரும்பிக் கொண்டிருக்கின்றார். ஐ. நா. பொதுச் செயலாளர் யுதாண்டின் அவசர அழைப் பொன்றைத் தொடர்ந்து டாக்டர் ஜாரிங் நியூயோர்க்குக் குப்போகிறார். டாக்டர் ஜாரிங் மீண்டும் மேற்காஸியாவில்தமது அமைதிமுயற்சிகளைத் தொடங்கும்படி யுதாண்டினால் கேட்டுக் கொள்ளப்படுவார் என்று தெரிகின்றது.

பொறுத்துதான் லிபியாவின் முடிவு இருக்கும் என்றுஅவர் தெரிவித்தார்.

அமெரிக்க யோசனைகளை சிரியா முற்றாகவே நிராகரித்துவிட்டது பாலஸ்தீன கொமாண்டோக்களின் அபிலாஷைகளை சிரியா ஆதரித்து நிற்கும் என்று சிரியா அரசாங்கம் அறிவித்திருக்கின்றது. அமெரிக்கயோசனைகளை ஐக்கிய அரபுக்குடியரசு, ஜோர்டான், சூடான் போன்ற நாடுகள் ஏற்கனவே ஏற்றுக்கொள்ளமுடிவு செய்துள்ளன

### இஸ்ரேல் பிரதமர்

அமெரிக்க யோசனைகளை ஏற்றுக்கொள்ள முடிவுசெய்ததைத் தொடர்ந்து இஸ்ரேல் பிரதமமந்திரி திருமதி கொல்டாமெயர் அமெரிக்காவுக்கு அனுப்புவதற்கான பதிலொன்றை தயாரித்துக் கொண்டிருக்கின்றார். இந்த யோசனைகள் பற்றி பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்காக ஓர் அதிகாரியையும் இஸ்ரேல் அரசாங்கம் நியமித்திருக்கின்றது.

### அம்மானில் ஆர்ப்பாட்டம்

அமெரிக்க யோசனைகளை ஏற்றுக் கொண்டுள்ளமைக்காக, ஐக்கிய அரபுக் குடியரசை அரபுக்கொமாண்டோ இயக்கங்கள் பல கண்டித்துள்ளன. அதேசமயம் ஜோர்டானில் இரு கொமாண்டோ இயக்கங்கள் ஆதரித்திருப்பதாகவும் கூறப்படுகின்றது

நேற்று ஜோர்டான் தலைநகரான அம்மானில் கொமாண்டோக்கள் பெரிய அணிவகுப்பொன்றை நடத்தினார்கள். அமெரிக்க யோசனைகளை ஜோர்டானும்

### நக்ஸல்பாரிகள் கைது

கல்கத்தா, ஆக. 1

கல்கத்தாவில் நேற்றிரவு பொலிசார் ஒரு வீட்டைத் திடீரென்று சோதனைபோட்டு அங்கிருந்த 11 பேரைக் கைதுசெய்தனர். மிகமுக்கிய நக்ஸல்பாரி தலைவர் ஒருவரும் இவர்களுடன் கைதுசெய்யப்பட்டார்.

ஏராளமான ஆயுதங்களையும் பொலிசார் கைப்பற்றினர்.

......

### கைதிகளை விடுதலைசெய்யக் கோரிக்கை

மொன்டிவிடியோ, ஆகஸ்ட் 1

உருகுவ நாட்டில் கொரில்லாக்கள் கடத்திக் கொண்டு போயுள்ள இரு வெளிநாட்டுப் பிரமுகர்களையும் விடுதலை செய்வதற்கு சிறையில் வைக்கப்பட்டுள்ள பல அரசியல் கைதிகளை விடுதலை செய்யும்படி கொரில்லாக்கள் கேட்டிருக்கின்றனர்.

......

### உற்சவம்

அனலைதீவு, சனி

அனலைதீவு ஐயனார்கோவில் வருடாந்த உற்சவம் இம்மாதம் 7ந் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவிருக்கிறது 15ந் திகதி வேட்டை திருவிழா நடைபெறும். அன்றுமாலை புளியந்தீவு நாகதம்பிரான் கோவிலுக்கு சுவாமிஎழுந்தருளுவார். 16ந் திகதி தேர்த்திருவிழாவும், 17ந் திகதி பூங்காவனத்திருவிழாவும் நிகழும்.

0 0 0

புங்குடுதீவு, சனி

புங்குடுதீவு ஸ்ரீமுத்துமாரி அம்பாள் வருடாந்த உற்

## 'மக்கள் கமிட்டி சர்வாதிகாரத்துக்கு முதற்படியல்ல'

— கட்டானை எம். பி.

நீர்கொழும்பு, சனி

மக்கள் கமிட்டி சர்வாதிகாரத்திற்கு முதல் படி என்று கூறுவதில் உண்மையில்லை மக்களின் நலனுக்காகவே இக் கமிட்டிகள் உருவாக்கப்படுகின்றன.

கட்டானை எம். பி. திரு. கே. சி. டிசில்வா, இங்கு நடைபெற்ற கூட்டமொன்றில் பேசும் போது மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது; மக்களின் நலன்கருதி அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்படும் திட்டங்களை அரசாங்கத்தின் மூலம் செயல் படுத்துவதற்காகவே மக்கள் கமிட்டி நிறுவப்படவிருக்கிறது மக்களுக்கு தேவையான விஷயங்களில் இக்கமிட்டி அரசாங்கத்திற்கு ஆலோசனைவழங்கும்.

நான் எனக்கு வாக்களித்த சுதந்திரக் கட்சியினருக்கு மட்டும் பிரதிநிதியல்ல. கட்டானை தொகுதி மக்கள் எல்லோருக்கும் நான் தான் பிரதிநிதி என் தொகுதியில் உள்ள எல்லோரையும்சரிசமமாகவே நடத்துவேன். ஐக்கியதேசியக் கட்சிவாக்காளர்களில் பலர் என் கொள்கையை ஆதரித்து எனக்கு வாக்களித்துள்ளார் என்பதை திடமாகக் கூறுவேன்.

வேலையில்லாத் திண்டாட்டந்தான் நாட்டிலுள்ள முக்கியபிரச்னையாகும். கிராமத்திலுள்ள பத்துப் பேருக்கு உத்தியோகம் வழங்குவதன் மூலம் இப்பிரச்னைக்குத் தீர்வுகாண முடியாதுசோஷலிஸக்கொள்கையின் மூலம் தான் இப்பிரச்னைக்குத் தீர்வுகாணலாம்.

## நூறுவருடத்தின் பின்னர் பாடசாலையில் அனுமதி

உடுப்பிட்டி, சனி

கடந்த100வருடங்களுக்கு மேலாகச் சிறுபான்மைச் சமூகப் பிள்ளைகள் அனுமதிக்கப்படாமல் இருந்து வந்த வடபகுதியிலுள்ள ஒரேயொரு பாடசாலையிலும் அடுத்த வருடம்முதம் சிறுபான்மைச் சமூகப் பிள்ளைகள் பிரவேசம் செய்யப் போகின்றார்கள்.

கரணவாய் வடக்குத் தாமோதர வித்தியாசாலையிலேயே அடுத்த வருடம் முதல் சிறுபான்மைச் சமூகப் பிள்ளைகள் முதலாம் வகுப்பில் சேர்க்கப் படவிருக்கின்றனர்.

நவிண்டில், சாண்டா சந்தை, கொற்றாவத்தை, இலந்தைக்காடு, இமையாணன் முதலிய பகுதிகளைச் சேர்ந்த சிறுபான்மைச் சமூகப் பிரமுகர்கள் அடங்கிய குழுவொன்று பாடசாலைத் தலைமையாசிரியர் திரு சுப்பிரமணியத்தைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தியது.

இக் குழுவில் திருவாளர்கள் மு இளையதம்பி, ஆ. இரத்தினம், கே. சின்னத்தம்பி, எஸ். பொன்னுத்துரை, க. அப்புக்குட்டி ஆகியோர் அங்கம் வகித்தனர்.

இவர்கள் தங்கள் சமூகப் பிள்ளைகளையும் சேர்த்துப் படிப்பிக்க வேண்டும் என்று கோரினர் இதனைத் தொடர்ந்து வித்தியாலயத் தலைமை ஆசிரியர் சிறுபான்மைத் தமிழ் மாணவர்களை முதலாம் வகுப்பில் சேர்க்க நடவடிக்கை எடுத்து உள்ளார் ஐம்பது வீதமான பிள்ளைகளுக்கே ஆசன வசதி உண்டு என்பதையும் அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள்.

## விவசாய... இரவில் [partly illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வெள்ளி யூபிலி விழா

பண்டத்தரிப்பு, சனி

ஓ. எம். ஐ. எனப்படும் அமல உற்பவ பரித்தியாகிகள் சபையைச்சேர்ந்தகுருக்களான வண. கென்றிறெட்றிக்கேஸ, வண. எட்வாட் முத்துப்புள்ளே ஆகிய இருவரதும்குருத்துவபணியின்25ம் வருட வெள்ளியூபிலி விழா இம்மாதம் 6ந் திகதி நடைபெறவிருக்கிறது.

— —

### பாடசாலையின் தரத்தை உயர்த்த எம். பி. உறுதி

பல்லவராயன்கட்டு, சனி

பல்லவராயன்கட்டு சைவப்பாடசாலை விளையாட்டுக் கதம்ப விழா அண்மையில் நடைபெற்றது பூநகரிப் பகுதி காரியாதிகாரி திரு. க. கிருஷ்ணமூர்த்தி தலைமையில் நடைபெற்ற விழாவில் கிளிநொச்சி எம். பி. திரு. ஆனந்தசங்கரி, வட்டாரக் கல்வி அதிகாரி திரு நா. துரைசாமி ஆகியோர் கலந்துகொண்டனர்.

கிளிநொச்சிஎம். பி. இங்கு பேசுகையில், மேற்படி பாடசாலையைத் தரம் உயர்த்தித்தர ஆவன செய்வதாகவும் உறுதியளித்தார் வட்டார வித்தியாதிகாரி பேசுகையில், 4-ம் வகுப்பு மாணவியான ப. குமுதாவின் ஆங்கிலப் பேச்சு உச்சரிப்பைப் பாராட்டினார், திரு. ஆனந்தசங்கரி எம். பி. வெற்றிபெற்றோருக்குப் பரிசில்களை வழங்கினார். தலைமையாசிரியர் திரு. செ. கதிரவேலு நன்றி கூறினார்

— —

### மொழிப்பயிற்சிக் கழகம்

பண்டத்தரிப்பு, ஞாயிறு

'எதிர்காலத்தில் பல மொழிகளிலும் தேர்ச்சியளித்து அவர்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்குடனே இப் பயிற்சிக் கழகம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படுகிறது' என்று இளவாலை சித்திரமேழி பழனியானந்தசபை மண்டபத்தில் மொழிப் பயிற்சிக்கழகத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்துப் பேசுகையில் சைவப்புலவர் வித்துவான் திரு. வ. செல்லையா குறிப்பிட்டார்.

அவர்மேலும் பேசுகையில் 'ஒவ்வொருவரும் தமது சுயமொழியில் முதலில் தேர்ச்சி பெறவேண்டும். பின்னர் தொடர்ந்து பல மொழிகளிலும் தேர்ச்சி பெறவேண்டும்' என்றார்.

கழக நிர்வாக சபையினர் தெரிவில் தலைவராக திரு. வ. செல்லையாவும், உபதலைவராக திரு. சு. செல்

## எம். பி.க்கள் மூலம் கண்டக்டர்கள் நியமனம்

கோட்டை, சனி

இலங்கை பூராவும் நிலவி வரும் பஸ் சேவை சீர்கேட்டை நிவர்த்தி செய்வதற்காக மேலும் பல புதிய பஸ்களைச் சேவையில் ஈடுபடுத்த அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இதற்கு முன்னோடியாக பஸ் கண்டக்டர்களை நியமிப்பதில் தேசிய சேவை அமைச்சு ஈடுபட்டுள்ளது.

தொகுதி வாரியாக கண்டக்டர்கள் நியமிக்கப்படவிருப்பதாகவும், அந்தந்தத் தொகுதி ஆட்சிமன்ற உறுப்பினர்களின் சிபார்சின் பேரில் நியமனம் நடைபெறவிருப்பதாகவும் அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கல்விப் பொதுத்தராதரப் பத்திரப் பரீட்சையில் ஆறு பாடங்கள் சித்திபெற்ற பத்துப் பேர் ஒவ்வொரு தொகுதிகளிலிருந்தும் தெரிவுசெய்யப்படுவார்கள் என்றும், இதற்கான கடிதங்கள் சகல எம். பி.க்களுக்கும் கடந்த வாரம் அனுப்பப்பட்டுவிட்டதாகவும் அந்த அதிகாரி கூறினார்.

ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதிக்கு முன்னதாகப் பெயர்ப் பட்டியல்களைத் தேசிய சேவை அமைச்சுக்கு அனுப்பி வைக்கும்படி சகல எம். பி.க்களும் கேட்கப்பட்டிருந்தனர்.

## மாணவர் கிராமத்திலேயே கல்வி வசதி பெறலாம்

தாவடி, சனி

''கிராமத்தில் வாழும் பிள்ளைகள் தங்கள் கிராமங்களிலே கல்வி கற்கக்கூடிய முறையில் மக்கள் முன்னணி அரசாங்கம் வசதிகள்செய்து வருகிறது. விஞ்ஞானம் கணிதம், ஆங்கிலம்போன்ற பாடங்களைக் கற்பதற்காக இனிமேல் பெரிய பள்ளிக்கூடங்களை நாடிக் கிராமத்துப் பிள்ளைகள் செல்லவேண்டிய அவசியமில்லை.''

இவ்வாறு, தாவடி இந்து தமிழ்க்கலவன் பாடசாலைப் பெற்றோர் ஆசிரியர் சங்கக் கூட்டத்திற்குத் தலைமை வகித்து உரையாற்றிய, வழக்கறிஞர் திரு. மு. மதியாபரணம் கூறினார்.

மின்சார வசதி, தண்ணீர் வசதி, என்பன விரைவில் செய்து முடிப்பதாகவும் தாவடி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

திரு. சி. த. நடராசா, பண்டிதர் திரு. இ. இராசலிங்கம் உட்பட பலரும் பேசினர். புதுவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்கள்: திரு. வி தருமலிங்கம், வழக்கறிஞர் திரு. மு. மதியாபரணம், தலைவர்: திரு. வி இராசசிங்கம் உப தலைவர்: திரு. கு. தம்பையா, செயலாளர் திரு. சி. ஆறுமுகம், உப செயலாளர்: திரு. மா. சின்னத்தம்பி, பொருளாளர்: திரு. கா. இராசரத்தினம், உப பொருளாளர்: திரு. செ. நவரத்தினம் 11 பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

— —

### இலங்கையில் 10-வது மகாநாடு

கோட்டை சனி

பத்தாவது உலக பௌத்தர்கள் மகாநாடு அடுத்த ஆண்டு மேமாதம் இலங்கையில் நடைபெறவிருக்கிறது.

இதற்கு முன்னர் இலங்கையில் இம் மகாநாடு 1950-ம் ஆண்டு நடைபெற்றது. இதன்பின்னர் நடைபெற்ற மகாநாடுகள் யப்பான், பர்மா, இந்தியா கம்போடியா, நேபாளம் தாய்லாந்து மலேசியா ஆகிய இடங்களில் நடைபெற்றன.

இலங்கையில் நடைபெறவிருக்கும் இம் மகாநாட்டுக்கு சிங்கப்பூர் அமெரிக்கா தாய்லாந்து, இந்தியா, யப்பான், ரஷ்யா செக்கோசிலாவாக்கியா, மங்கோலியா கொறியா, ஜேர்மனி நேபாளம் அவுஸ்திரேலியா பிரான்ஸ், ஹொங்கொங் வியட்னும் பின்லாந்து இங்கிலாந்து, மலேஷியா, பிலிப்பைன்ஸ் பர்மா, நியூசிலாந்து ஆகிய நாடுகளில் இருந்து அறிஞர்கள் கலந்து கொள்வர்.

### குமாரபுர வெண்பா

யாழ்ப்பாணம், ஞாயிறு

குமாரபுர வெண்பா நூல் வெளியீட்டுவிழா இன்றுமாலை குமாரபுரம் சித்திரவேலாயுத சுவாமி கோவில் மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. முதலியார் ஆ. மு. கனகசபாபதி தலைமையில்

டும் மேற்காசியாவில் தமது அமைதி முயற்சிகளைத் தொடங்கும்படி யுதாண்டிஞல் கேட்டுக் கொள்ளப்படுவார் என்று தெரிகின்றது.

### லிபியா மறுப்பு

அமெரிக்க யோசனைகளை லிபியாவும் ஏற்றுக்கொண்டு விட்டதாக வெளிவந்த செய்திகளை லிபியா வெளிநாட்டமைச்சர் மறுத்திருக்கிருர் இந்த யோசனைகளை இஸ்ரேலைச் சுற்றியுள்ள நாடுகள் ஏற்றுக் கொள்வதைப்

நகரான அம்மானில் கொமாண்டோக்கள் பெரிய அணிவகுப்பொன்றை நடத்திஞர்கள். அமெரிக்க யோசனைகளை ஜோர்டானும் ஏற்றுக் கொண்டிருப்பதைக் கண்டிக்கும் முகமாகவே இந்த அணிவகுப்பு ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது

பாலஸ்தீன விடுதலை இயக்கங்கள் தொடர்ந்து இஸ்ரேல் மீது தாக்குதல்களை நடத்திவரும் என்று அல்பத்தாஹ் இயக்கத்தலைவர் யாசர் அரபாத் கூறியிருக்கிருர்.

சைகோனிலுள்ள

## இந்திய தூதரகத்தின் முன் மீண்டும் ஆர்ப்பாட்டம்

சைகோன், ஆக 2

சைகோனிலுள்ள இந்திய 'கொன்சல் ஜெனரல்' காரியாலயத்தின் முன்ஞல் நேற்று நூற்றுக்கணக்கான தென் வியட்ஞமியர் ஆர்ப்பாட்டங்கள் செய்தனர். இந்திய அரசுக்கும், பிரதமர் இந்திராகாந்திக்கும் எதிராக ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷங்களைக் கிளப்பிஞர்கள்.

தென்வியட்ஞம் புரட்சி அரசாங்கத்தின் வெளிநாட்டமைச்சர் தைபின் அம்மையார் இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டதை அனுமதித்ததற்காக ஆட்சேபம் தெரிவிக்குமுகமாக இந்த ஆர்ப்பாட்டங்களை தென்வியட்ஞமியர் நடத்திஞர்கள்.

சைகோனிலுள்ள இந்தியத் தூதரகம் சமீபத்தில் தாக்கப்பட்டது. இதுபற்றி இந்திய அரசாங்கம் சைகோனுக்கு ஆட்சேபம் தெரிவித்திருந்தது. ஆஞல் இந்திய ஆட்சேபக் குறிப்பை ஏற்க சைகோன் அரசு மறுத்துவிட்டது இதுபற்றி இந்திய ஆட்சிமன்றத்தில் அண்மையில் பிரச்னை கிளப்பப்பட்டது.

### களஞ்சியம் நிறுவுக

மாவிட்டபுரம், திங்கள்

விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருட்களை நேரடியாக அரசாங்கம் கொள்வனவு செய்ய நிலக்களஞ்சியங்களை நிறுவும்படி அரசாங்கத்திடம் கோரும் தீர்மானமொன்றை தேசிய விவசாயிகள் முன்னணியின் யாழ். பிரதேசக்கிளை நிறைவேற்றியுள்ளது. தலைவர் திரு. எஸ். விஷயானந்தம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

### கோடா வைத்திருந்தார் அபராதம்

மாவிட்டபுரம், சனி

உரும்பராயைச் சேர்ந்த எஸ். செல்லன் என்பவர் சட்டவிரோதமாக 290 டிரும் கோடா வைத்திருந்ததாகக் குற்றஞ்சாட்டி சுன்ஞகம் பொலிசாரால் மல்லாகம் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் நீதிபதி எதிரிக்கு 150 ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார்.

இவ்வூரைச் சேர்ந்த வேலன் பொன்னன் என்பவர் 56 டிரும் வடிசாராயம் சட்டவிரோதமாக வைத்திருந்ததாகக் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் மல்லாகம் நீதிபதி 50 ரூபா அபராதம் விதித்தார்

### அனலைதீவு ஸ்ரீ.ல. சு.க. கிளை

அனலைதீவு, சனி

அனலைதீவு ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சிக்கிளை அங்குரார்ப்பணக் கூட்டம் அனலைதீவு ஸ்ரீ ல. சு. கட்சிக்கிளை அமைப்பாளர் திரு ஐ. நடராசா தலைமையில் நடைபெற்றது. பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு ஐ. நடராசா உபதலைவர்கள் திரு ஐ. ஆறுமுகம் திரு வ. விசுவநாதர், காரியதரிசி திரு. க. சிவனடியார், தனதிகாரி திரு க. கந்தசாமி. 5பேர் கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

17ந் திகதி பூங்காவனத்திருவிழாவும் நிகழும்.

0 0 0

புங்குடுதீவு, சனி

புங்குடுதீவு ஸ்ரீமுத்துமாரி அம்பாள் வருடாந்த உற்சவம் இம்மாதம் 7-ம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து பத்துநாட்கள் நடைபெறும் 15-ம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தோற்சவமும் நிகழும்.

திருவிழாநாட்களில் தினமும் சொற்பொழிவுகள் இடம்பெறும் கவிஞர் காரை செ. சுந்தரம்பிள்ளை, வித்துவான் பொன். அ. கனகசபை, திரு. க. சபா ஆனந்தர், பண்டிதர் சோ. தியாகராசபிள்ளை, திரு. நா. க. சண்முகநாதபிள்ளை, எஸ். விநாயகமூர்த்தி வித்துவான் க. கி. நடராசன், கு வி. செல்லத்துரை, வித்துவான் சி. ஆறுமுகம் திருப்பூங்குடி வி. கே. ஆறுமுகம் ஆகியோர் முறையே பிரதிதினமும் சொற்பொழிவாற்றுவார்கள்.

### இராணுவ முகாமை இடம்மாற்றவும்

பச்சிலைப்பள்ளி. சனி

சட்டைக்காடு கிராமத்தின் நடுமத்தியில் கத்தோலிக்க தேவாலயம் சனசமூக நிலையம் பாடசாலை ஆகியவற்றிற்கு மிக அண்மையில் இராணுவமுகாம அமைந்துள்ளதாயும் மேற் குறிப்பிட்ட இடங்களுக்குச் செல்ல பெண்களும் பிள்ளைகளும் பொதுவாக அஞ்சுவதாயும் எனவே இராணுவமுகாமை சன நடமாட்டமற்ற பகுதிக்கு மாற்றுமாறு மேலதிகாரிகளை கோரும் தீர்மானம் முள்ளிப்பற்றுக் கிராமசபையின் மாதாந்தக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறியது.

### சிறுபான்மையினரும் அனுமதிக்கப்படுவர்

வேலணை, சனி

இம்மாதம் நடைபெறவிருக்கும் வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தின்போது சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் ஆலயத்தின் உள் சென்று வழிபாடு செய்ய அனுமதிக்கப்படவுள்ளனர். தீவுப்பகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் ஆலயநிர்வாகிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியதைத் தொடர்ந்து இவ் விதம் முடிவு செய்யப்பட்டது.

கப் பிரமுகர்கள் அடங்கிய நுக் கொண்டார்கள்.

## விவசாயக்கல்விக்குவிரைவில் ஒரு பல்கலைக்கழகம்

கோட்டை, சனி

விவசாய, தொழில் நுட்ப கல்விகளுக்காகத் தனியானதொரு பல்கலைக்கழகம் நிறுவுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

விவசாய அமைச்சர் திரு. ஹெக்ரர் கொப்பேகடுவா, கைத்தொழில் விஞ்ஞான விவகார அமைச்சர் திரு. ரி பி. சுபசிங்கா ஆகியோரின் ஆலோசனையின் பேரிலேயே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி பல்கலைக்கழகம் நிறுவுவதற்கு சீஞ, ரஷ்யா, செக்கோசிலாவாக்கியா, யூகோசிலாவாக்கியா ஆகிய நாடுகள் உதவ முன்வந்துள்ளதாகத் தெரிய வருகின்றது. இவ் விவசாய, தொழில் நுட்ப பல்கலைக்கழகத்தை தெகிவளையில் நிறுவுவதற்கு அரசு தீர்மானித்துள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இதன் ஆரம்ப வேலைகள் இவ் வருடம் ஒக்டோபர் மாதத்தில் ஆரம்பிக்கப்படலாம் என எதிர் பார்க்கப் படுகின்றது. இப் பல்கலைக் கழகத்தில் விவசாயம், தொழில் நுட்பம் ஆகிய இரு துறைகளிலும் இரு வருடப் பயிற்சி அளிக்கப்பட்டு அப்பயிற்சியில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு இரு வருடமுடிவில் பட்டம் வழங்கப்படும்.

## தெகிவளை இரட்டைக் கொலை வழக்கு

கோட்டை, சனி

தெஹிவளை இரட்டைக் கொலைவழக்கு நேற்றுகொழும்பு தெற்கு மாஜிஸ்டிரேட் திரு. கொலின் மெண்டிஸ் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

கொழும்பு சட்டவைத்திய அதிகாரி டாக்டர் டபிள்யூ. டீ. எல். பெர்ஞண்டோ சாட்சியமளித்தார்.

இவ்வழக்கில், இவ்வருடம் மே மாதம் 2ந் திகதி ஜனதாசா ஜெயசூரிய, வில்லியம் பெர்ஞண்டோ, டி. எல். பிரேமதிலகா ஆகியோர், டி. விமலதாசா, டி.ஜே விமலசந்திரா ஆகிய இருவரையும் துப்பாக்கியால்சுட்டு கொலை செய்ததாக தெஹிவளை பொலிசாரால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

கொலையுண்ட இருவரும் செனெட்டர் கே. எம் பி. இராசரத்திஞவுடன் காரில் சென்று கொண்டிருந்த போதே இச்சம்பவம் நடைபெற்றது.

மேல்விசாரணை ஆகஸ்ட் 11ந் திகதிக்கு ஒத்திப்பேசப்பட்டுள்ளது.

### கல்விச் சுற்றுலா

கைதடி, சனி

கைதடி நவீல்ட் செவிடர் குருடர் பாடசாலையைச் சேர்ந்த 50 மாணவர்கள் இலங்கையில் சரித்திர பிரசித்தி பெற்ற அனுராதபுரம், மிகிந்தலை, டம்புல்லை கிரிய, மின்னேரியா. பொல்லநறுவை, ஆகிய இடங்களுக்கு கல்விச்சுற்றுலா மேற்கொண்டுதிரும்பியுள்ளனர்.

### ஆசிரியர்கள் இடமாற்றம்

பருத்தித்துறை, சனி

யார்க்கரு விநாயகர் வித்தியாலய ஆசிரியர் திரு. எஸ். வீரகத்தி இரத்தினபுரி சென்ற் அலோசியஸ் கல்லூரிக்கும், குருநாகல் பராகதெனிய மகாவித்தியாலய ஆசிரியர் திரு. எஸ். சிற்றம்பலம் கட்டைவேலி ஞாஞசாரியாருக்கும் திருமதி எஸ். இரத்தினசிங்கம் கொழும்பு விவேகானந்தாவிலிருந்து கட்டைவேலி மெதடிஸ்த மிஷன் பாடசாலைக்கும் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய விவசாய ஆசிரியர் திரு. பி. கணேசமூர்த்தி வரணி மகாவித்தியாலயத்திற்கும் மாற்றப்பட்டுள்ளனர்.

### பெரியகட்டு அந்தோனியார்விழா

செட்டிகுளம், சனி

பெரியகட்டு அர்ச். அந்தோனியார் தேவாலய வருடாந்த உற்சவம் நேற்று முன்தினம் கொடியேற்றி வைத்பவதுடன் ஆரம்பமாகியது ஆராதனைகளை கட்டளைக்குரவர் வண. பிதா கொன்சலஸ் நடாத்திவைப்பார்.

சமூக என்பதையும் அவர்கள் ... டங்கிய நுக் கொண்டார்கள்.

தொடர்ந்து பல மொழிகளிலும் தேர்ச்சி பெறவேண்டும்' என்ருர்.

கழக நிர்வாக சபையினர் தெரிவில் தலைவராக திரு. வ. செல்லையாவும், உபதலைவராக திரு. சு. செல்லத்துரையும் செயலாளராக திரு. சி. நாகரத்தினமும் உப செயலாளராக திரு பொ. யோகேஸ்வரனும் தனதிகாரியாக திரு. ச. ஜெகநாதமும் ஏழு பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது. யாழ்ப்பாணம் மொழிப்பயிற்சிக்கழகம் என்று இதை அழைப்பதென்றும் யாழ்ப்பாணத்தில் தலைமைக் காரியாலயம் நிறுவுவதென்று முடிவு செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம், ஞாயிறு


குமாரபுர வெண்பா நூல் வெளியீட்டுவிழா இன்றுமாலை குமாரபுரம் சித்திரவேலாயுத சுவாமி கோவில் மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. முதலியார் ஆ. மு. கனகசபாபதி தலைமையில் நடைபெறும் இவ்விழாவை வவனியா மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஆ. பெருமையிஞர் தொடக்கி வைப்பார். பல பிரமுகர்கள் இதில் கலந்துகொண்டு பேசுவார்.


நேபாளம் அவுஸ்திரேலியா பிரான்ஸ், ஹொங்கொங் வியட்ஞம் பின்லாந்து இங்கிலாந்து, மலேஷியா, பிலிப்பைன்ஸ் பர்மா, நியூசிலாந்து ஆகிய நாடுகளில் இருந்து அறிஞர்கள் கலந்து கொள்வர்.

### இடமாற்றம்

உடுப்பிட்டி. சனி

கரணவாய் வடக்குப் பொன்னம்பல வித்தியாலயத்திற்கு ஆசிரியர்கள் திரு. தம்பிப்பிள்ளை, திரு. பூலோகசுந்தரம் ஆகியோர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.





## திரம்படச் சிவிறுவதற்கு உறுதியான புதிய யந்திரம் ஹேஸ்ப்றே 225 பிபீ

தட்டி விட்டதும் இயங்கும் சுலபமான விசையுடைய பீச்சு முனை கொண்டது.

புதிய ஹேஸ்ப்றே 225 பிபீ சிவிறியிலுள்ள ஈட்டி முனையில் பொருத்தப்பட்டுள்ள, தட்டிவிட்டமாத்திரத்தில் இயங்கும் புதிய தடுப்பு விசை சிறந்த முறையில் பயன்படுகிறது. ஏனெனில் இது, பாய்ச்சப்படும் மருந்தின் அமுக்கத்தைக் குறைந்த அளவிலிருந்து கூடுதலான அளவிற்குக் கட்டுப்படுத்த வசதியளிக்கின்றது. இது, குறிப்பாக, பயிர்களுக்குச் சேதம் ஏற்படுமோ என்ற பயமே இல்லாமல், களைக் கொல்லிகளைத் தெளிக்க உபயோகப்படுகிறது.

துருதடுப்பு பித்தளைத் தாங்கியிலானது. வெளிப்புறத்தில், சதுர அங்குலத்திற்கு 70 ருத்தல் அமுக்கம் தரக்கூடிய பிஸ்டன் உடையது. அத்துடன் இடதுகைப் பிரயோகத்திற்கென அடிப்புறத்தில் இயக்கு விசை ஒன்றும் பொருத்தப்பெற்றது.

ஹேஸ்ப்றே உதிரிப்பாகங்கள் எப்போதும் கிடைக்கும்.

VISION 76/70

HAYLEYS

தயாரிப்போர்:
ஹேலீஸ் லிமிட்
400, டீன்ஸ் ரோட்,
கொழும்பு 10.
தொலைபேசி:
96331

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

உன் கடமையைத் தைரியமாகச் செய்து விட்டால் நீ அடையும் பயன் யாது? அதைச் செய்ததையே பலனாக அடைவாய். செயலே பலனாகும்.

—ஸெனீக்கா

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna: Telephone: 889.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் ஆடி மாதம் 17-ந் திகதி (2 - 8 - 70)

## புரியும் தமிழ்

'ஸ்ரீலங்கா மக்களின் அரசியலமைப்புச் சபையின் நிலையற் கட்டளைகள். வழிகாட்டு, விடயக்குழு' என்ற தலைப்பில் அரசியலமைப்புச் சபையின் நடைமுறை விதிகள் பற்றிய விபரங்கள் தமிழாக்கம் செய்யப்பட்டிருக்கின்றன. அரசியலமைப்புச்சபையின் அங்குரார்ப்பணக்கூட்ட வைபவத்தில் சிங்களத்துக்கும் தமிழுக்கும் இடமளிக்கப்பட்டது. தமிழ் மொழிக்கும் உரிய அந்தஸ்து அளிக்கும் அரசாங்கத்தின் நல்ல மனப்பான்மை கண்டு இந்த நாட்டிலுள்ள தமிழ் பேசும் மக்கள் மகிழ்ச்சியும்நம்பிக்கையும் கொண்டுள்ளனர் சிங்களத்தில் வெளியாகும் அரசாங்கப் பிரசுரங்கள் வெளியீடுகள் தமிழிலும் வெளிவருகின்றன. 'சிங்களம் மட்டும்தான்' என்ற நிலை மாறி தமிழ் மொழிக்கும் உரிய இடம் கிடைப்பது கண்டு தமிழ் மக்கள் ஆறுதலடைகின்றனர் ஆனால் தமிழ் மொழி பெயர்ப்பு தமிழ்மக்களுக்கு—சாதாரண மக்களுக்கு—விளங்கக் கூடியதாக—புரியும் படியாக—இருக்கவேண்டும்.

சட்டவிதிகளை மொழி பெயர்ப்பதிலும் உத்தியோக மொழித் திணைக்களம் தயாரித்துள்ள 'கலைச்சொற்களையே' பாவிக்கவேண்டுமென்ற நிபந்தனையிருப்பதாலும் அந்த முறைகளையே பின்பற்றவேண்டுமென்ற சங்கடம் மொழி பெயர்ப்பாளர்களுக்கு இருக்கலாம். அவர்களைக் குறைசொல்லவும் இடமில்லை.

ஆனாலும் மொழி என்பது ஒருவரை யொருவர் புரிந்து கொள்ளவே ஏற்பட்டது சட்ட விதிகளைத் தமிழில் மொழி பெயர்ப்பதும் அரசாங்க பிரசுரங்கள், வெளியீடுகளைத் தமிழில் வெளியிடுவதும் தமிழ் மக்கள் அவற்றைத் தெரிந்துகொள்ளவும் புரிந்து கொள்ளவும்தான். தமிழ் மக்கள் எல்லோருமே உத்தியோக மொழித்திணைக்களம் உருவாக்கி வெளியிட்டுள்ள கலைச்சொற்றொடர் அகராதியை வைத்துத் தெரிந்து தெளிவடைய முடியாது.

ஆங்கில மொழி உலக மொழியாக வளம்பெற்றிருப்பதற்கும் உலகம் முழுவதிலும் வியாபித்திருப்பதற்கும் அது பிறமொழிச் சொற்களையும் தனதாக்கிக்கொண்டது முக்கிய காரணம்.

நமது மொழிபெயர்ப்பாளர்களும் உத்தியோக மொழித் திணைக்களத்தினரும் சாதாரண மக்களும் அரசாங்க வெளியீடுகள், பிரசுரங்கள் அரசாங்க அறிக்கைகளைத் தமிழில் மொழி பெயர்க்கும் போது, தமிழ் மட்டுமே தெரிந்த தமிழ் பேசும் மக்கள் புரிந்துகொள்வதற்காகத்தான் இவை தமிழில் வெளியிடப்படுகின்றன வென்பதை மனதில் கொண்டு மொழி பெயர்க்க வேண்டும். புரியுந் தமிழில் மொழி பெயர்ப்பு இருக்க வேண்டும்.

## மிரட்டல்

இஸ்ரேலுடனை ராஜீய உறவைத் துண்டிப்பதென்று இலங்கை அரசாங்கம் தீர்மானித்து அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டதற்காக இலங்கையின்பொருளாதாரத்தைப் பாதிக்கச் செய்யக்கூடிய சில முயற்சிகளை யூதர் கட்டுப்பாட்டிலுள்ள இரண்டு பெரிய நாடும் எந்த நாட்டு மக்களும் நல்லதைச் செய்தால் பாராட்டவும் தீயதுசெய்தால் கண்டிக்கவும் இலங்கை மக்களுக்கும் உரிமையிருக்கிறது உலக நாடுகள் பலவற்றின் கோரிக்கைக்கும் உலக அரங்கான ஐ. நா. தீர்மானத்தையும் உதாசீனம் செய்து, தனது ஆக்கிர

# இலங்கையை விட சிறிதான சுவிட்சர்லாந்து அரசமைப்பு

**காலஞ்சென்றபிரதமர் திரு எஸ், டபிள்யூ ஆர் டி பண்டார நாயகா இலங்கையை 'ஆசியாவின் சுவிட்ஸர்லாந்தாக' உருவாக்க வேண்டுமென்று அடிக்கடி கூறி வந்தார், புதிய அரசியல் அமைப்பை உருவாக்கும் பணியில் மக்கள் பிரதிநிதிகள் இப்போது ஈடுபட்டுள்ளனர், இச் சமயத்தில் சுவிட்சர்லாந்தின் அரசியல் அமைப்பு என்னவென்பதை இங்கு தருகிறோம், 1959-ம் ஆண்டில் ஈழநாடு பத்திரிகையில் மூன்று பகுதிகளாக இது வெளிவந்தது, அதன் முதற்பகுதி இன்று இங்கு தரப்படுகிறது, மிகுதிப்பகுதி இரண்டும் பின்னர் வெளியாகும்.**

ஸ்விட்ஸர்லாந்து இலங்கையைவிடச் சின்ன நாடாகும். இலங்கையின் விஸ்தீரணம் ஏறத்தாழ 25 ஆயிரம் சதுர மைல். ஸ்விட்ஸர்லாந்தோ 16 ஆயிரம் சதுர மைல் தான். அதாவது இலங்கையின் அளவிலே மூன்றில் இரண்டு பங்குக்கும் குறைவாகும்.

இலங்கையின் மொத்த சனத் தொகை 92 லட்சம். ஸ்விட்ஸர்லாந்தின் சனத் தொகையோ 50 லட்சம் தான். ஐரோப்பாவின் மத்திய பாகத்திலுள்ள ஸ்விட்ஸர்லாந்து, அல்ப்ஸ் மலைப் பிராந்தியத்தில் உள்ளது. கடல் சம்பந்தமே இல்லை. வடக்கே ஜெர்மனி, மேற்கே பிரான்ஸ், தெற்கே இத்தாலி, கிழக்கே அவுஸ்திரியா இந்நான்கு நாடுகளாலும் சூழப்பட்ட இந்தச் சின்ன நாடு, 22 'காண்டன்'களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அமெரிக்காவில் உள்ள மாகாணங்கள் எல்லாம் செயற்கை எல்லைகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன ஆனால் ஸ்விஸ் 'காண்டன்'கள் அப்படியல்ல மலைகள், ஏரிகள் முதலிய இயற்கை எல்லைகள் அவற்றைப் பிரிக்கின்றன.

மன் ஸ்விஸ்கள் மேற்கிலும், இத்தாலிய ஸ்விஸ் தெற்கிலும் வசிக்கின்றனர் ரோமான்ஷ் என்பது லத்தீனிலிருந்து வந்தது. நாட்டிலே பல பள்ளத்தாக்குகளில் உள்ள கிராமங்களில் அம்மொழி பாதுகாக்கப்பட்டுவருகிறது. சனத்தொகையில் 100க்கு 57 பேர் புரடடஸ்டென்ட் கிறிஸ்தவர்கள் (ஸ்விஸ்லியன் கால்வினிஸ்ட்), 41 வீதம் கத்தோலிக்கர்

ஸ்விஸ் அரசாங்கம் 1291ம் வருஷம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது ஆஸ்திரிய ராஜகுடும்ப ஆதிக்கத்தை எதிர்க்க ஊரிஸ், ஸ்விஸ், அண்டர்வால்டன் என்னும் ஊர்களைச் சேர்ந்த மக்கள் கூட்டுப் பாதுகாப்புச் சங்கமாகச் சேர்ந்தனர். நெப்போலியன் காலத்தில் ஸ்விட்ஸர்லாந்து ஒரு பிரான்சுப் பாதுகாப்பு நாடாக இருந்தது. அதற்குப் பின்னர் ஸ்விஸர்லாந்து ஒரு சுதந்திரக் கூட்டரசாங்கமாக மாறியது. ஒவ்வொரு காண்டனையும் சேர்ந்தவர்கள் அதிக அரசியல் சுதந்திரம் கேட்டனர். இதுபற்றிய உள்நாட்டு 'இரத்தம் இல்லாத சண்டை' நடந்தது. மதம், இனம் முதலிய ரணமாக கிரிஸானிய ஜெர்மன், இத்தாலியன், ரோமான்ஷ் மொழி பேசுபவர்களும், பெர்ன், பிரீபோக், வாலே ஆகிய இக்காண்டன்களில் ஜெர்மன், பிரெஞ்சு மொழி பேசும் சமூகத்தினரும் கலந்து வாழ்கிறார்கள். இங்கும் மொழி காரணமாகச் சச்சரவு ஏற்படுவதில்லை ஒவ்வொரு காண்டனும் பல விஷயங்களிலும் சுதந்திர உரிமைகளுடன் திகழ்கின்றன. சிறுபான்மைச் சமூகங்களுக்குச் சம உரிமைகள் உத்தரவாதமளிக்கப்பட்டுள்ளன. பள்ளிக்கூடங்களிலும், அரசாங்கத்திலும் தங்கள் தாய் மொழியையே பாவிக்கலாம் சமஷ்டி முறை காரணமாக அங்கு சமய அமைதியும் நிலவமுடிகிறது.

தலைமை அரசாங்கத்திடம் அதிக அதிகாரங்கள் ஒப்புவிக்கப்பட்டதெனினும். ஒவ்வொரு 'காண்டனிலும்' உண்மையான ஜனநாயக ஆட்சி நடைபெறமுடிகிறது மேலும் காண்டன் ஆட்சி முறைக்கும், சமஷ்டி ஆட்சிக்கும் பரஸ்பரம் உறவு அதிகமுண்டு. 'காண்டன்' ஆட்சியைச் சேர்ந்த 40 பேர் இப்போதுசமஷ்டிப்பார்லிமெண்டில் அங்கம் வகிக்கின்றனர்

ஒருவர் பரஸ்பரம் உதவிக் கொள்ளவேண்டியது அவசியமாகும். பொதுநிலம், பொதுவழி, முதலாயன பொதுவாகக் கவனிக்கப்பட வேண்டியதால் இந்தக் கம்யூன், அல்லது சமூக ஸ்தாபனங்கள் அதிக அவசியமாயின இதனால் நன்மையுண்டு தீங்கும் உண்டு. தீங்கைவிட நன்மையே அதிகம்.

மொத்தச் சனதொகையில் மூன்றில் இரண்டு பங்கினருக்கு மேல் கிராமங்களிலேயே வசிக்கின்றனர் ஆங்காங்கே சிறிய கம்யூன்களில் எல்லாப் பிரஜைகளும்கூடி பல தீர்மானங்களைப் பற்றியும் விவாதித்து முடிவுசெய்கின்றார்கள். வாக்கெடுப்பு ரகசியமானது அல்ல. ஆகவே விருப்புவெறுப்பின்றிப் பலரும் விவாதத்திற்பங்கெடுப்பர். ஆகவே ஒவ்வொரு பிரஜையும் நேர்முகமாகவிட்டு நிர்வாகத்திற் சிரத்தை காட்டி ஈடுபடமுடிகிறது பெரிய நகரங்களில்தான், தேர்தல் ரகசியமுறையில் நடைபெற வேண்டியுள்ளது. கம்யூன் நிர்வாகத்தில் ஒத்துழைப்பது நல்ல அரசியற் பயிற்சியாகிறது. பெரிய அரசியற் தலைவர்களும் முதலில் தங்கள் கம்யூன் நிர்வாகத்தில் பயிற்சி பெற்றவர்களே கம்யூன்களைக் காலிசெய்து மக்கள் பெரிய நகரங்களுக்குச் சென்று குடியேறாமல் தடுக்கவும் பல ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

ஸ்விஸ் கம்யூன் அல்லது கிராம சபைகள் அதிக சுதந்திரமும் ஜனநாயகமும் வாய்ந்தவை. அவற்றின் சுதந்திரத்தில் காண்டன்கள் குறுக்கிடமுடியாது அதன் சுதந்திரத்தில் காண்டன் சபை குறுக்கிட்டால், கம்யூன்கள் சமஷ்டி உயர்நீதிமன்றத்துக்கு அப்பீல் செய்துகொள்ளலாம். தனிப்பட்டவரின் சுதந்திரம் போலவே கம்யூன் அல்லது கிராமிய சுதந்திரமும் பாதுகாக்கப்படுகின்றது பள்ளிக்கூடம். கோவில், ஏழைகள் கஷ்டநிவாரணம், மரணச் சடங்கு, ரஸ்தாக்கள், ரஸ்தா பொலிஸ், பொது ஒழுங்கு. நெருப்பு கட்டிடம் முதலியவை பற்றிய பொறுப்பும் உரிமையும் கம்யூன் அல்லது கிராமிய சபைக்கு இருந்துவருகின்றன.

# நான்கு மொழி பேசும் மக்கள் ஐக்கியமாக வாழும் நாடு

நான்கு பெரிய நகரங்கள் அந்நாட்டில் உண்டு. அவற்றில் சூரிச் என்ற நகரமே மிகப் பெரிது. 4,28000 பேர் அதில் வசிக்கின்றனர். மற்றப்படி பாஸில், ஜெனிவா, பெர்ன் முதலிய மூன்று நகரங்களிலுந்தான் வேற்றுமைகள் எல்லாம் [illegible]பட்டன முதலில் முற்போக்குச் சக்திகள் சேர்ந்து 1848ம் ஆண்டு சமஷ்டி அரசியல் அமைப்பு திட்டத்தை வெற்றிகரமாக ஏற்படுத்தினை. [illegible] குடியரசாக உருப் கல்வி, பொருளாதாரம், பொலிஸ் முதலிய அதிகாரங்களெல்லாம், மண்டல ஆட்சிக்கே உண்டு அந்த அதிகாரிகள் எல்லோரும் அடிக்கடி, சமஷ்டி அதிகாரிகளுடன் மகாநாடு கூடிப் பேசுகிறார்கள்

## ஐயாறன் எழுதுவது:

தமிழகம் சென்றிருந்த நல்லை திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீனத்தின் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்துக்குத் திரும்பியுள்ளார். வந்த நாளன்று மாலையே இங்கு ஒரு கோவிலில் கதா காலட்சேபம்!

அவர் ஒரு வருடத்தில் பத்துமாதம் தமிழகத்திலும் இரண்டு மாதங்களே ஈழத்திலும் இருக்கிறார். இதனால் இங்கு மடத்தின் காரியங்கள் வளர்ச்சியடைய முடியாமல் போவதுடன், ஈழத்துக்கு அவரது தொண்டு அதிகம் கிடைக்கமுடியாதபடி போவதாகஒரு குறை என் காதுக்கு எட்டியது.

இதைப் பற்றி அவரைக் கேட்டபோது தமிழகத்திலே செட்டிநாடு உள்ளிட்டுப் பல இடங்களிலும் தமக்கு நல்ல வரவேற்பு இருப்பதாயும், சன்மானமும் அதிகமாகக் கிடைப்பதாகவும், அந்த வருமானத்தைக் கொண்டே இங்கு ஈழத்திலே மடத்தை நடத்த வேண்டியிருப்பதாயும் தெரிவித்தார்கள்.

நல்லூர் திருவிழாவின் போது இங்கு மடத்தில் அன்னதானம் நடக்கவேண்டியிருப்பதாகவும், மடத்துக்கு வேறு சொத்துக்கள் இல்லையென்று மதுரை ஆடி வீதிக் கூட்டத்தில் அவர் தெரிவித்ததும், அப்பெருங் கூட்டத்திலிருந்த உடுப்பி லாட்ஜ் முதலாளியான சுப்பையா நாயுடு அவர்கள், (கொழும்பில் வர்த்தகத் தொடர்புள்ளவர்) முன்வந்து, 3 மூடை அரிசியும், அதற்கான காய்கறி முதலியவைகளையும் நல்லை மடத்தில் அன்னதானத்துக்காகச் சேர்ப்பிக்க ஒழுங்குசெய்வதாக அறிவித்தாராம். அவரைப் பின்பற்றிப் பல தமிழ் அன்பர்களும் காசோலைகளைக் காணிக்கையாகச் செலுத்தினரென்றும், தமிழகத்திலிருந்து இவ்விதம் வருமானம் கிடைக்காவிடில் இங்கு மடத்தைத் தொடர்ந்து நடத்துவது கடினமாகுமென்றும் தெரிவித்தார்.

சுவாமிகளின் தொண்டு ஈழத்துக்குத்தான் அதிகம் தேவை. அது கிடைக்க வேண்டுமாயின், அதற்கான பொறுப்பு ஈழத்து அன்பர்கள் கையிலேயே உள்ளது. [illegible]ரான் சுவாமிகளையே தமக்குப் பதில் கதாப்பிரசங்கம் செய்ய ஒழுங்குசெய்வதாகத் தெரிகிறது நம் நாட்டுக் கலைச்செல்வரை, நாம் எப்போதுதான் தக்கபடி சன்மானமளித்துக் கௌரவிக்கப்போகிறோமோ?

துறவியான அவருக்குத் தேவைகள் மிகக் குறைவு, ஆனால் அவர் பொறுப்பில் நடைபெறும் சைவ ஸ்தாபனம்முட்டின்றி நடப்பதற்குத்தான் பொருள் தேவை. அவரைஇனி இங்கேயே அதிகம் இருக்கச் செய்யும்படி திருவருள்தான் பல உள்ளங்களைத் தூண்டி வசதிசெய்யவேண்டும்

0 0 0

தமிழகத்தில் ஈழத்துக்கலைஞரை கௌரவிப்பதில்லையென்று ஒரு கருத்துபொதுவாக ஈழத்தில் நிலவுகிறது. ஆனால் தக்க கலைஞர்களுக்கு அங்கு நல்லவரவேற்பு இருப்பதாயும் அளவெட்டியைச் சேர்ந்த புகழ்பெற்ற தவில் வித்வான் தட்சணாமூர்த்திக்கு, மதுரைக்கு பக்கத்திலுள்ள திருத்தங்கல் என்னுமிடத்தில் நடந்த கோவில் திருவிழாவிலே ஒரு நாள் இரவுவாசிக்க ரூ 1500 கொடுத்ததாயும், வருடத்தில் இவ்விதம்பலமுறை அவருக்கு அழைப்பு வருவதாகவும் பெருமையுடனும் மகிழ்ச்சியுடனும் தம்பிரான் சுவாமிகள் தெரிவித்தார்.

அன்றுதிருத்தங்கலில்நமது அளவெட்டிக்காரருடன் போட்டியாக வாசிக்க ஒரு தமிழக வித்வானுக்கு ஏற்பாடு செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டது. ஆனால்அவர் பயந்துபோய் அவ்விழாவுக்கே தலைகாட்டவில்லையென்றும், நம்மவரே தனியாக வாசித்ததாகவும் தெரிகிறது. மன்னார்குடி பிரபல நாதசுர வித்வான் பரமசிவானந்தம் ஸ்பெஷலாக அன்று நாயனம் வாசித்துள்ளார். கலைஞர் தட்சணாமூர்த்தியின் வாசிப்பைக் கேட்க தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்தும் சுமார் நூறு நாகசுர வித்வான்கள் திருத்தங்கலுக்குச் சென்றிருந்தார்களாம்.

ஈழத்துக் கலைஞர்களில் தக்கவர்களுக்கு தமிழகத்திலே நல்ல வரவேற்புள்ளதென்பதைக் கேட்கமகிழ்ச்சியளிக்கின்றது. இங்கு பல நல்ல கலைஞர்கள் உண்டு. அவர்களுக்கு தமிழகத்திலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக இலங்கையின்பொருளாதாரத்தைப் பாதிக்கச் செய்யக்கூடிய சில முயற்சிகளை யூதர் கட்டுப்பாட்டிலுள்ள இரண்டு பெரிய பிரிட்டிஷ் கம்பனிகள் இரகசியத்திட்டம் தீட்டியிருப்பது அம்பலமாகியிருக்கிறது. 'மிரட்டல்', 'பகிஷ்கரிப்பு', 'நெருக்கடி நடவடிக்கைகள்' உட்பட்ட இரகசியத்திட்டம் தீட்டப்பட்டிருக்கிறதாம். இந்த நடவடிக்கையைக் கேள்விப்பட்ட இலங்கை மக்கள் மட்டுமல்ல சுதந்திரத்தை மதிக்கும் எந்த நாட்டு மக்களும் கொதிப்படையாமலிருக்கமாட்டார்கள்.

பிரிட்டனுக்கும் இலங்கைக்கும் தொடர்புகள் இருக்கின்றன. சில கடமைப்பாடுகளும் இலங்கைக்கு இருக்கலாம். ஆனாலும் இலங்கை ஒரு சுதந்திர நாடு. தனது சுதந்திரத்தையும் சுயநிர்ணய உரிமைகளையும் பாதுகாத்துக் கொள்வதற்கு இலங்கை மக்களுக்கு உரிமையும் தகுதியுமுண்டு. எந்த நாடுகள் பலவற்றின் கோரிக்கைக்கும் உலக அரங்கான ஐ. நா. தீர்மானத்தையும் உதாசீனம் செய்து, தனது ஆக்கிரமிப்பு நடவடிக்கையே சரியெனக் கூறிவரும் இஸ்ரேலுடன் வைத்துள்ள ராஜீய உறவைத் துண்டிப்பதன்மூலம்தான் இஸ்ரேலுக்கும் அதைப் போன்ற நாடுகளுக்கும் புத்தி புகட்ட முடியுமென இலங்கை மக்கள் கருதினால் அது அவர்களுடைய சுதந்திரம்.

தேயிலை விற்பனைக்குக் கெடுதி செய்து 'மிரட்டல்', 'பகிஷ்கரிப்பு' பொருளாதார நெருக்கடி நடவடிக்கைகளை பிரிட்டிஷ் வர்த்தகப் பெரும் புள்ளிகள் மேற்கொள்வதானால் இந்த நடவடிக்கையை முறியடிக்க ஆசிய ஆபிரிக்க மக்கள் மட்டுமல்ல சுதந்திரத்தை விரும்பும் உலக மக்கள் யாருமே ஒப்ப முடியாது

ஆசிரியருக்குக்கடிதம்

# பக்தியை வளர்க்க சமயக் கருத்தரங்கு

சென்ற முப்பதாந்திகதி வியாழக்கிழமை 'ஈழநாடு' பத்திரிகையில் ஐயாறன் பகுதியில் எழுதிய கருத்தரங்கு பற்றிய செய்தி தவறான கருத்தை ஏற்படுத்துமாதலால் அன்று கருத்தரங்கம் நடந்ததை விளக்குகின்றேன். மாணவர்களிடையே சமய பக்தியை வளர்க்க நாவலர்சபைக் காரியதரிசியால் கருத்தரங்கொன்றிற்கு யாழ்.மத்திய கல்லூரியில் சென்ற 17ந் திகதி ஏற்பாடு செய்யப்பட்டது. யாழ்ப்பாணத்திலுள்ள கல்லூரிகள் ஒவ்வொன்றிலுமிருந்தும் 5 மாணவர்களும் ஓர் ஆசிரியரும் கருத்தரங்கில் பங்கு கொண்டனர்.

கருத்தரங்கு காலை 9மணிக்கு முன்னாள் வைத்தீஸ்வர வித்தியாலய அதிபர் திரு. ச. அம்பிகைபாகன் தலைமையில் ஆரம்பமாகியது.

இதில் சைவசமயமும் சமூகமும், சைவசமயமும் விஞ்ஞானமும், சைவ சமய வாழ்வு வாழ்க்கைக்கு அவசியமா?, சைவசமயமும் இலக்கியமும், சமயமும் பொருளாதாரமும் எனப்பல பிரிவுகளில் கருத்தரங்கு நிகழ்ந்தது.

மாணவர்களும் ஆசிரியர்களும உற்சாகத்துடன் கருத்தரங்கில் பங்குபற்றினர்.

ஆரம்பத்தில் யாழ் மத்திய கல்லூரி ஆசிரியர் திரு. சிவராமலிங்கம் சைவசமயமும் சமூகமும் என்னும் பொருள் பற்றிய விவாதத்தை ஆரம்பித்து வைத்தார்.

திருவாளர் வைத்திலிங்கம். வித்துவான் ஆறுமுகம், பிரம்மஸ்ரீ வெங்கடேச சர்மா, வித்துவான் க. கிநடராசன் ஆகியோர் முறையே ஒவ்வொரு தலைப்புகளுக்கும் ஏற்ப விவாதத்தை ஆரம்பித்து வைத்தனர்.

ஈற்றில் சமயமும் இலக்கியமும் என்னும் பொருளை எடுத்துக்கொண்ட வித்துவான் சி- ஆறுமுகம்காலதாமதமானதால் சுருக்கமாகப் பேசினார், அடுத்த கருத்தரங்கில் இதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் என நாவலர்சபைக் காரியதரிசி தெரிவித்தார்.

இக்கருத்தரங்கில் ஒரு [illegible]லூரியைச் சேர்ந்த மாணவர் ஒருவர் கடவுள் நம்பிக்கையின்றிப் பேசினார் என்பது உண்மை. ஆனால் பல மாணவர்களும் ஆசிரியர்களும் கடவுள் உண்டு என்பதற்கு ஆதாரங்கள் எடுத்தாண்டு பேசினார்கள்.

இவ்வித உரையாடலின் போது ஒரு கல்லூரி மாணவன் நாவலருக்குச் சிலையமைத்ததே பிழை என்று கூடக் கூறினார்.

இக் கருத்தரங்கின் முடிவில் தலைமைதாங்கிய திரு. அம்பிகைபாகன் கடவுள் உண்டு என்பதற்குச் சாதகமாகப் பேசிய மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் கருத்துக்களைத் துலக்கிக் கடவுள் உண்டு என்னும் தீர்ப்பை வழங்கினார்.

இவ்வண்ணமே எடுத்துக்கொண்ட தலைப்புக்களில் விவாதத்தை ஆரம்பித்து வைத்தவர்களே அவ்வப் பகுதிகளின் மத்தியட்சகராகித் தீர்ப்புக்களையும் வழங்கினர்.

'இக்கருத்தரங்கில் சைவ மாணவருக்குச் சைவசமயத்தில் அதிக ஈடுபாடு ஏற்படுத்த முடியும். அதற்கான உற்சாகம் மாணவரிடையே அதிகம் காணப்படுகிறது. ஆனபடியால் மூன்றுமாத காலத்துக்கு ஒருமுறை இவ்வித கருத்தரங்குகள் நடாத்த ஏற்பாடு செய்கிறேன்'' என்று நாவலர்சபைக்காரியதரிசி திரு. ஸ்ரீகாந்தா கூறியதுடன் அனைவர்க்கும் நன்றியும் கூறினார். இதுவே அன்று நிகழ்ந்த நிகழ்ச்சியாகும். தயவுசெய்து இக் கடிதத்தை ஆசிரியருக்குக் கடிதம் என்ற தலைப்பில் பிரசுரிக்கும்வண்ணம் வேண்டுகிறேன்.

க. கதிரவேல்,
இந்துமா மன்றப்
பொறுப்பாளர்

(இதுபற்றி 'ஐயாறன்' பகுதியில் வெளியானசெய்தி தவறான கருத்தை யாரிடையும் ஏற்படுத்தியிருக்குமாயின் அதற்காக வருந்துகிறோம்.)

மிகப் பெரிது, 4,28000 பேர் அதில் வசிக்கின்றனர். மற்றப்படி பாஸில், ஜெனிவா, பெர்ன் முதலிய மூன்று நகரங்களிலுந்தான் ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் வசிக்கின்றனர். கடைசியாகக் குறிப்பிட்ட பெர்ன் தான் ஸ்விட்ஸர்லாந்தின் தலைநகர். சமஷ்டி அரசாங்கத்தின் தலைமைப் பீடம் அங்குதான். சமஷ்டி அரசாங்கக் காரியாலயங்கள் அநேகமாக அங்குதான் உள்ளன. ஆனால் சமஷ்டி நீதிமன்றம் லாஸேன் நகரில் உள்ளது.

மொத்தம் நான்கு மொழிகள் பேசப்படுகின்றன. நூற்றுக்கு 73 பேர் வீதம் ஜெர்மனி பேசுபவர். பிரெஞ்சு 21வீதம். இத்தாலி 6வீதம், ரோமான்ஷ் 1 வீதம் ஜெர்

1848ம் ஆண்டு சமஷ்டி அரசியல் அமைப்பு திட்டத்தை வெற்றிகரமாக ஏற்படுத்தின. இது படிப்படியாக [illegible] குடியரசாக உருப்பெற்று இரு உலக யுத்த அக்கினியிலும் சிக்காமல் தப்பி முன்னேறிவருகிறது.

விவசாயமே முக்கிய தொழிலாக இருந்த ஸ்விட்ஸர்லாந்தில் முன்னர் கூலிப்பட்டாளத்து ஆட்களை ஏற்றுமதி செய்துவந்தனர். பின்னர் அது கைத்தொழில் நாடாக அபிவிருத்தியடைந்தது. இயந்திரங்கள், கடிகாரங்கள், புடைவைகள், ஒட்டல்கள், மருந்து வகைகள் முதலியவை பெரிதும் அபிவிருத்தி அடைந்திருக்கின்றன. மக்களில் நான்கில் ஒரு பங்கினர், சொந்தத்தில் கமம் செய்கின்றனர். பசுப்பண்ணை மிகவும் இலாபகரமாக நடந்தது. பால்வகைகள் அதிகமாக ஏற்றுமதியாகின்றன. கைத்தொழில்களுக்கு மூலப் பொருள்கள் இறக்குமதியாகின்றன. ஸ்விட்ஸர்லாந்துக்குக் காலணிகள் எதுவும் கிடையாது. அதற்கான முயற்சியும் செய்யவில்லை. பொதுவாகத் தொழிலாளரின் வாழ்க்கை அந்தஸ்து மற்ற நாடுகளில் உள்ளதைவிட மேலானது. பல சமூகத் திட்டங்கள் தொழிலாளரின் நல உரிமைகளைப் பாதுகாக்கின்றன. இன்னும் பல சமூக சேவைத் திட்டங்கள் உருவாகின்றன.

## அரசியல் திட்டம்

ஸ்விட்ஸர்லாந்து ஐரோப்பாவிலேயே பழைய குடியரசாகும். நாட்டிலுள்ள ஒவ்வொரு மக்களுக்கும் அரசியல் நிர்வாகத்தில் பொறுப்பளிக்கப்படுகிறது. ஓர் அரசிடமோ அல்லது தெரிவு செய்யப்பட்ட ஒருசிலரிடமோ அதிகாரம் ஒப்படைக்கப்படவில்லை முக்கிய விஷயங்களில் எல்லாம் சர்வசன வாக்கெடுப்பின் மூலமே நிர்ணயிக்கப்படுகிறது இப்போதுள்ள சமஷ்டி அரசியல் 1874ம் ஆண்டில் தயாரிக்கப்பட்டது. மொத்தம் 22 'காண்டன்'கள் உண்டு ஒவ்வொரு காண்டன் அல்லது மண்டலத்திலும் தனிச் சட்ட சபையுமுண்டு. சுயாட்சி உரிமைகள் அதற்கு ஆதிமுதல் இனம் முதலிய சிறுபான்மைச் சமூகங்களுக்கு அடிப்படையிலேயே சட்டபூர்வமாக பாதுகாப்பு அளிக்கப்பட்டு வருகிறது. இதனால் பல மொழிகள் பேசும் சமூகங்களுக்குமிடையில் நல்லுறவு இருக்கமுடிகிறது. சில காண்டன்கள் அல்லது மண்டலங்களில் பல்வேறு மொழி பேசுபவர் கலந்து வாழ்கின்றனர். உதா

[illegible]ளெல்லாம், மண்டல ஆட்சிக்கே உண்டு அந்த அதிகாரிகள் எல்லோரும் அடிக்கடி, சமஷ்டி அதிகாரிகளுடன் மகாநாடு கூடிப் பேசுகிறார்கள்

பெர்ன் எனும் காண்டன் தான் ஆகப்பெரியது 8 லட்சத்து 38 ஆயிரம் பேர் அங்கு உளர் அபென்ஸல் இன்னர் ரோட்ஸ் எனும் காண்டனில் 134,00 பேர்களேதான் வசிக்கின்றனர். மண்டலங்களுக்கு இடையே அதிகவேற்றுமை உண்டு. என்றாலும் சமஷ்டி அரசாங்க சபையில், எல்லா காண்டன்களுக்கும் சரிசமமான ஸ்தானங்கள் அளிக்கப்படுகின்றன. அரசியற் திட்டத்தில் ஏதாவது திருத்தம் செய்யவேண்டுமாயின், வாக்காளர் மெஜாரிட்டி மட்டுமன்றி மெஜாரிட்டி காண்டன்களும் அதை ஆதரிக்க வேண்டும் என்பது நிபந்தனை.

வருமானவரி, மூலதனவரி முதலிய நேரடி வரிகளைக் காண்டன்களே விதித்து வசூலிக்கின்றன. சுங்கம் முதலிய மறைமுக வரிகளே தலைமை அரசாங்கத்தின்வருமான இனங்களாகும் வரி விகிதங்களை வருடா வருடம் மக்களே நிர்ணயிக்கிறார்கள்.

## மூன்று பிரஜா உரிமைகள்

ஸ்விஸ் மக்கள் ஒவ்வொருவருக்கும் மூன்றுவித பிரஜா உரிமையுண்டு. ஸ்விஸ், காண்டன், சமூக (கம்யூன்) பிரஜா உரிமைகளில் மூன்று முக்கியமானவை. வேறெந்த இடத்திற் குடியேறி வசித்தாலும் சரி, ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவருக்குள்ள சமூக பிரஜாவுரிமை வழிவழியாகத் தொடர்ந்து இருந்துவரும். இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பிறகு ஜெர்மனி முதலிய ஐரோப்பிய நாடுகளில் நிலைமை மோசமானதாய் அங்கு குடியேறியிருந்த ஸ்விஸ் பிரஜைகள் தங்கள் தாய்நாடு திரும்பி, தங்கள் பழையகம்யூன்களில் உரிமையுடன்வந்துவசித்தனர். பாட்டன் முப்பாட்டன் காலத்தில் வெளியேறியவர்கள், நாட்டையே கண்டறியாதவர்கள், இந்த ஸ்விஸ் கம்யூன் பிரஜா உரிமையின்மீது திரும்பத் தங்கள் தாய்நாட்டுக்குவரமுடிந்தது. நாட்டில் ஒருவர் எங்குவேண்டுமானாலும் சென்றுவசித்து, ஆங்காங்கேயுள்ள காண்டன் கம்யூன், பிரஜாவுரிமைகளையும் பயன்படுத்கலாம்.

ஸ்விட்ஸர்லாந்து மலைநாடு பள்ளத்தாக்குகளிலே பலபல கிராமங்களில் மக்கள் வசிக்கிறார்கள். அவர்களுக்குப்பனிச் சரிவால் எந்தச் சமயமும் ஆபத்து ஏற்படலாம். ஆபத்துக்காலத்தில் ஒருவருக்கு

[illegible] போலீஸ், பொது ஒழுங்கு. நெருப்பு கட்டிடம் முதலியவை பற்றிய பொறுப்பும் உரிமையும் கம்யூன் அல்லது கிராமிய சபைக்கு இருந்துவருகின்றன.

## வாக்குரிமை

இருபது வயதான ஆண்களுக்கு வாக்குரிமை உண்டு. பெண்களுக்கு வாக்குரிமை இல்லை. அந்த வயதில் ஆண்கள் கட்டாயராணுவப்பயிற்சிக்குச்செல்லவேண்டும். சில காண்டன்களில் வாக்குரிமை வயது 25 அல்லது 27 ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது அனுபவஸ்தர்களின் கையிலேயே நாட்டின் நிர்வாகம் இருக்கவேண்டுமென்றே சில காண்டன்கள் இவ்விதம் செய்கின்றன. அமெரிக்காவில் உயர்நீதிமன்ற நீதிபதிகளெல்லாரு 70 வயதுக்கு மேற்பட்டவர்கள். ஸ்விட்ஸர்லந்தில், சமஷ்டி நீதிபதிகளின் சராசரி வயது 50 தான்.

அந்நாட்டில் வசிக்கும் அந்நியர்களுக்கு (1930 9%) வாக்குரிமைஇல்லை. ஆனால் ஒரே ஒரு காண்டனில் ஸ்தல விஷயங்களில் அவர்களுக்கு வாக்குரிமைஅளிக்கப்படுகின்றது.

பெண்களுக்கு வாக்குரிமை இல்லாததுபற்றிச் சிலர் வியப்படையலாம். பெண்களுக்குச்சரியான இடம் குடும்பம்தான் என்றும், பொது வாழ்வு அல்லவென்றும் இருந்த பழைய ஜெர்மன் வழக்கம் இன்றும் இங்கு பின்பற்றப்படுகிறது. இதுபற்றி இங்கு பெண்களும் கிளர்ச்சி செய்வதில்லை வாக்குரிமை வந்தவுடன் ஆண்கள் துப்பாக்கியும் பிடிக்கவேண்டும். சில கிராமங்களில் கோவில், பள்ளிக்கூட விஷயங்களில் பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டுள்ளது. சில காண்டங்களில் தொழிற் தகராறுகளைத் தீர்க்கும் பஞ்சாயத்துக்களுக்கும் பெண்கள் தெரிவு செய்யப்படுகின்றார்கள்.

சில காண்டன்களில் வாக்குரிமையைப்பயன்படுத்த தவர்களுக்குத் தண்டனையும் விதிக்கப்படுகின்றது. அங்கு தேர்தலில் வாக்குகள் அதிகமாகப்பதிவாகின்றன. சர்வஜன வாக்கெடுப்பில், யாரும் தங்கள் இஷ்டப்படி பயமின்றிவாக்களிக்கலாம் இந்த வுரிமைமறுக்கப்படும் யாரும் சமஷ்டி உயர்நீதிமன்றத்துக்குப் புகார்செய்யலாம். தேர்தலில் ஒழுங்கீனம் நடந்தாலும். சமூக விஷயமாக இருந்தாலும் அதுபற்றிப் புகார்செய்ய யாருக்கும் உரிமைஅளிக்கப்பட்டு இருக்கிறது.

சுவாமிகளின் தொண்டு ஈழத்துக்குத்தான் அதிகம் தேவை. அது கிடைக்க வேண்டுமாயின், அதற்கான பொறுப்பு ஈழத்து அன்பர்கள் கையிலேயே உள்ளது. நல்லை மடத்தில் நடைபெறும் சமயத் தொண்டுகளுக்குத் தேவையானவற்றை இங்குள்ளவர்களே தாராளமாகக் கொடுப்பதாயின், தாம் தமிழகத்தில் அதிகம் தங்கியிருக்கத் தேவையிராதென்று தெரிவித்தார் தம்பிரான் அவர்கள்.

0 0 0

''மதுரை மக்களின் உள்ளத்தைத் தங்களைப்போல் இதுவரை யாரும் கவர்ந்ததில்லை'' என்று பி.டி.ராஜன் அவர்கள், தம்பிரான் அவர்களைப் பகிரங்கமாகச் சொல்லிப் பாராட்டினாராம்.

சென்ற இடங்களில் எல்லாம் செலவுபோக கதைக்கு இருநூறு ரூபாய்களுக்கு மேல் சன்மானம் கிடைக்கின்றதாம். திருமுருக கிருபானந்தவாரியார்அவர்களும் பல இடங்களுக்குத் தம்பி

தக்கவர்களுக்கு தமிழகத்திலே நல்ல வரவேற்புள்ளதென்பதைக் கேட்கமகிழ்ச்சியளிக்கின்றது. இங்கு பல நல்ல கலைஞர்கள் உண்டு. அவர்களுக்கு தமிழகத்திலே போதிய விளம்பரமும் சந்தர்ப்பமும் கிடைக்கச்செய்தால், அதிகமான கலைஞர்களுக்கு அது பேருதவியாக இருக்கும்.

இன்னும்சில தமிழகத்துச் செய்திகளை, தம்பிரான்சுவாமிகள் தெரிவித்தார்கள். நாளை அதைப்பற்றி எழுதுகிறேன்.

0 0 0

மீளா அடிமை உமக்கே
ஆளாய்ப்
பிறரை வேண்டாதே
மூளாத்தீபோல் உள்ளே
கனன்று
முகத்தால் மிகவாடி
ஆளாய் இருக்கும்அடியார்
தங்கள்
அல்லல் சொன்னக்கால்
வாளாங்கிருப்பீர் திருவா
ரூரில்
வாழ்ந்து போதீரே.
-சுந்தரமூர்த்தி சுவாமிகள்

# மலை வீதி "கல்விச் சதுக்கம்'' ஆகும்!

கோட்டை, சனி

மலை வீதிப்பகுயைக் கல்விச் சதுக்கமாக மாற்ற கல்வியமைச்சர் அல்ஹாஜ் பதியுதீன் மாமூத் தீர்மானித்துள்ளார். தனக்குக் கீழ் இயங்கும் இலாகாக்கள் முழுவதையும் இப்பகுக்குள்ளேயே நிறுவ அவர் திட்டமிட்டுள்ளார்.

மேற்படி கல்வியமைச்சரின் திட்டத்தில் 12 அடுக்குகளைக் கொண்ட 3 மாடிக் கட்டிடங்களும், 4 அடுக்குகளைக் கொண்ட மாடிக் கட்டிடங்களும் நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது. அடுத்த வரவு செலவுத் திட்டத்தில் இக்கல்விச் சதுக்கத்துக்கு வேண்டிய நிதியை ஒதுக்குமாறு அரசாங்கத்தை வற்புறுத்தியுள்ளார்.

## வீண் செலவு

கோட்டை, சனி

ஒருகோடி 97 லட்சம்ரூபா எண்ணெய் கொழுப்பு கூட்டுஸ்தாபனத்துக்கென அளிக்கப்பட்ட முதலீட்டில் வீணாகச் செலவாகியுள்ளதென ஆடிட்டர் ஜெனரலின் அறிக்கை தெரிவிக்கின்றது. இவ்வறிக்கையில் 1966,67ம் ஆண்டுகளில் 16,11,938 ரூபா இக் கூட்டுத்தாபனத்தில் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## திலகர் நிறைவு

புதுடில்லி, ஆகஸ்ட் 1

லோகமான்ய கங்காதர திலகரின் நினைவுநாள் இன்று கொண்டாடப்பட்டது புதுடில்லியில் நடைபெற்ற ஒரு வைபவத்தில் திலகரின் சிலைக்கு ஜனாதிபதி மாலை சூட்டினார். அவர் பேசுகையில் திலகர் மாபெரும் மக்கள் தலைவர். அந்நிய ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் துணிவை அவர் மக்களுக்குத் தந்தார். அவரது பரந்த கல்வி அறிவும், தியாகமும் தூய வாழ்வும் மகாத்மாவை அவரிடம் அன்பு செலுத்தத் தூண்டின என்றார்.

கோட்டை, சனி

சிங்கள வர்த்தக சேம்பரின் தலைவர் திரு ஆதர் பெரேரா நாட்டில் மக்களுக்கு அன்றாடம் தேவையான அத்தியாவசிய பொருட்கள் பல பதுக்கப்படுகின்றனவெனவும் இத்தகைய பதுக்கலைத் தடுக்க தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென அரசாங்கத்தைக் கோரியுள்ளார்.

இப் பத்திரிகை "ஈழநாடு'' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலே வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 1ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org